# திலகாஞ்சலி



யாழ்ப்பாணம் கொட்டடி
காலஞ்சென்ற மலாயன்பென்சனர் உயர்திரு. கனகசபை சிவசாமி ஆறுமுகம்
திருமதி சற்குணம் ஆறுமுகம் ஆகியோரின கனிஷ்ட புதல்வியும்

யாழ்ப்பாணம் காரைநகர் பிரசித்த நொத்தாரிசும் சட்ட உதவியாளருமான
கந்தையா முருகேசு தர்மராசா அவர்களின்
அருமைத் துணைவியாருமாகிய

திருமதி. **திலகவதி தர்மராசா**

அவர்களின்

# நினைவு மலர்

IN MEMORY OF THA LATE
MRS. THILAGAWATHY THARMARAJAH

2005.10.11

921
தர்ம
SLIPR



# சமர்ப்பணம்



மலேசியாவில் பிறந்து யாழ்ப்பாணம், கோப்பாய் தெற்கு தபாற்கந்தோர்

ஒழுங்கை **“அம்பாள் இல்லத்தில்”** சிறப்புற வாழ்ந்து,

லண்டனில் வாழ்ந்துவரும் மருகர் டாக்டர். வே. சோதிநாதன் -

பெறாமகள், பேராசிரியர் நளாயினி சோதிநாதன்

ஆகியோரின் கொழும்பு வெள்ளவத்தை □ாமர்ஸ் அவெனியு **2** ம்

இலக்கத்தில் அமைந்துள்ள இல்லத்தில் இறுதிக்காலத்தில் வாழ்ந்து

இறைவன் திருப்பாதம் நண்ணியவரும் சமயாசாரமும்,

தெய்வபக்தியுங் கொண்டவருமாகிய

**திருமதி. திலகவதி தர்மராசாவை**

என்றும் நினைவு கூர்ந்து இம் மலரைச்

சமர்ப்பிக்கிறோம்

***- பேரன்பர்கள் -***



மண்ணகம் 1947-12-09

விண்ணகம் 2005-09-11

சைவப்பற்றும், தமிழ்ப்பண்பாடும் பேணிவாழ்ந்த

# திருமதி திலகவதி தர்மராசா

திதி வெண்பா

அன்புக்கும் உண்டோ அளவீடெம் மாசையம்மா
பண்புக்கும் உண்டோ பதிலீடு – என்றுருகி
கூடி யிருந்தமக்கள் கணவர் நிலைகுலைந்தார்
ஆடிவளர் பிறைசஷ்டி அன்றே.

# தேவாரம்

திருமறைக்காடு திருக்குறுந்தொகை

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்மினே. 374

திருநல்லூர் திருத்தாண்டகம்

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே. 425

திருக்கருகாவூர் திருத்தாண்டகம்

# திருவாசகம்

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கிழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை யாண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாந்தீ வினையி னேற்கே. 665

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருபெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 768

## திருவிசைப்பா

கருவூர்த்தேவர் அருளிச் செய்தது

திரைலோக்கியசுந்தரம் காந்தாரம்

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்? கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. 806

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாழறவீசிய சண்டிக்கும் அண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோவிலும் போனகமும் அருளி
சோதிமணிமுடித் தாமமும் நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த

எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார் 862

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
"பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன்; அடியின்கீழ் இருக்க" என்றார். 871

## திருப்புகழ்

பிற்சேர்க்கை

### (ஈழத்துத் திருப்புகழ்)
### கதிர்காமம்

தனதனன தான தனதனன தான
தனதனன தானத் தனதானா

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவு பிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினை யிலாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே.

## திருமதி. திலகவதி தர்மராசா அவர்கள் 1996 ஆம் ஆண்டு கனடாவில் எழுதி ஆக்கி கனடா வானொலியிலும் புதினத்தாள்களிலும் வெளியிட்ட தத்துவங்கள், கட்டுரைகள், கதைகள் மற்றும் சில கவிதைகள் :

### ஒரு சில தத்துவங்கள்

வாழ்க்கையில் நாம் ஆசைப்பட்டுத் தேடும் பணம், அதிகாரம், பெருமை, எல்லாமே நாம் இறந்து போன பின் நம்முடன் வரக்கூடியவை அல்ல. ஆனால் இவை எதுவானாலும் அது இறைவனுக்கே அர்ப்பணம் என்று நினைத்துவிடும்போது அவை அழிவில்லாத் தன்மையைப் பெறுகின்றன.

இரவு நேரத்துக்குத் தேவையானவற்றைப் பகலில் தேடி வைத்துக் கொள்ள வேண்டும். மழைக்காலத்திற்கு வேண்டியதை, அதற்கு முந்திய, மற்றைய காலத்தில் தேடி வைத்துக் கொள்ள வேண்டும்.

முதுமைக்குத் தேவைப்படுவதை இளமையில் தேடி வைத்துக் கொள்வதே அறிவுடைமை. அதே போல் மறுமைக்கு வேண்டியதை இம்மையில் தேடிக் கொள்ள வேண்டும்.

பணம் சேரச் சேர சாப்பாடும் குறையும். தூக்கமும், ஒழுக்கமும், நிம்மதியும் குறையும். ஏன் பக்தியும் கூடக் குறையும் !

நமது பிரார்த்தனைகள் கடவுளின் தீர்ப்பை மாற்ற இயலாவிட்டாலும், நம்மையே நல்லவனாக மாற்றும் வல்லமை கொண்டவை என்பதில் ஐயமில்லை.

இறைவனது உதவி தாமதித்துக் கிடைத்தாலும் அது வலுவானது என்பதை உணர வேண்டும்.

# பழமொழிகளில் அடங்கியிருக்கும் வாழ்க்கைத் தத்துவங்கள்

## அப்பன் மாண்டால் தெரியும் அப்பனருமை - உப்புச் சமைந்தால் தெரியும் உப்பின் அருமை

அப்பன் (தந்தை) குடும்பத் தலைவன். பொறுப்பு மிக்கவன். அவன் இறந்தால் தான் தெரியவரும் குடும்பத்தின் கஷ்டம். அந்த நேரத்தில் தான் அவனின் அருமை பெருமையைக் குடும்பத்தவரும் மற்றையோரும் உணர்வார்கள்.

## உப்பு விலையில் மலிவானது. செயலில் மிக்கது. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே

உப்பு இல்லாப் பண்டம் எத்தனை மதிப்பு வாய்ந்ததாக இருந்தாலும் உண்பதற்கு உதவாது. குப்பையிலே போடும் ஒரு கழிவுப் பொருளாகி விடுகின்றது.

அவ்வேறே பிள்ளைகளுக்கு அப்பனும், பெண்ணுக்கு அதாவது பிள்ளையின் தாய்க்குக் கணவனும் இல்லாது போனால் சமுதாய நிலையில் தாழ்வு அடைகின்றனர்.

எமது சமூகத்தில் அன்றும் இன்றும் பெண்ணுக்குச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தி - சமூக வாழ்வில் ஆணுக்கு முதலிடத்தைக் கொடுத்து வருகின்றனர்.

அதனால் கும்பத்தில், ஏன், சமூகத்தில், உலகில் சரி பாதி பங்குகொள்ள வேண்டிய பெண், குடும்பத்தில் தாழ்வு நிலை - சமூகக்கட்டுப்பாடு, சீதனக் கொடுமை என்பவற்றால் பாதிக்கப்படுகிறாள்.

அதனால் நான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன் என்று தன்னை நினைத்து தானே சதா ஆழ்ந்த வேதனை அடைகின்றாள்.

அதனால் பெண் பிள்ளையைப் பெறுவதிலும் பார்க்க - ஆண் பிள்ளையைப் பெற்று வளர்க்க விரும்புகிறாள். சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை வேண்டும் என்று கூறப்படுகின்றது.

பெண் இல்லாவிட்டால் ஆணில்லை - ஆணில்லாவிட்டால் பெண்ணில்லை - ஆணும் பெண்ணும் இணைந்ததே குடும்பம் தனி மனிதன், குடும்பம், சமூகம், நாடு எனக் கொண்டே உலகம் வியாபிக்கின்றது என்பதை ஏன் இந்த மனித சமூகம் மறந்து நடக்கின்றதோ தெரியவில்லை.

இன்றைய உலகில் சகல துறைகளிலும் ஆண்களுக்கு இளைத்தவர்கள் அல்ல பெண்களாகிய நாம் எனப் பெண்ணினம் அறைகூவி நிற்கும் நேரத்திலும் பெண்ணைக் குறைத்து எடைபோடும் நிலை மாறாது இருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

**"தாயைச் சந்தையிலே கண்டால் பிள்ளையை வீட்டிலேயா பார்க்க முடியும்"**

**"தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை"**

இரண்டு பழ மொழிகளும் தாய்வழி மகள் என்பதையே உணர்த்துகின்றன.

**"தாயைப் பார்த்துப் பெண்ணைக் கொள்ளு"**
**"பாலைப் பார்த்து பசுவைக் கொள்ளு"**

என்பதனால் முன்னைய இரண்டு பழமொழிகளின் கருத்து இந்தப் பழமொழி மூலம் வலுப் பெறுகின்றது.

தந்தையை விடத் தாயே பெண் பிள்ளையைக் கவனித்து பேணிக் காப்பாள். எனவே தாயின் குணநலன்களை அறிந்து கொண்டால் மகள் எப்படியிருப்பாள் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

தந்தை எப்படி நடந்தாலும் பிள்ளையின் பாசம் தாயின் பக்கமே கூடுதலாக இருக்கும். தாய் கலங்குவதைப் பார்த்தால் சேயின் மனம் கசியும்.

**"தாய் தவிரச் சகலமும் வாங்கலாம்."**
என்பது உண்மையிலும் உண்மை.

**"தாய்க்குப் பின் தாரம்"**
மனைவி இறந்தால் மறுமணம் செய்து கொள்ளலாம். ஆனால் பெற்றவளை இழந்தால் எங்கே பெறலாம்?

**"தாய் இல்லாத பிள்ளையைத் தலையிலே குட்டலாமா ?"** என்பதன் மூலம் தாயை இழந்த பிள்ளையின் நிலைப்பாடு எத்தகையது என்பதை உணரக் கூடியதாக இருக்கின்றது.

**"தாய் முகம் காணத பிள்ளையும்**
**மழை முகம் காணாத பயிரும்"**

பிள்ளை அழுகின்றது. வீட்டில் உள்ள குழந்தையின் தாயைத் தவிர சகலரும் மாறி மாறி அழுகையைத் தவிர்க்கத் துடிக்கின்றனர்.

பலவிதமான விளையாட்டுப் பொருட்களையும் - தின்பண்டங்களையும் கொடுத்துப் பலன் எதுவுமில்லை. அழுகை கூடிக் கொண்டே இருக்கிறது.

எங்கிருந்தோ தாயின் குரல் எழுகின்றது. அழுகை தணிகின்றது. அழுகை சிரிப்பாக மாறுகின்றது. இத்தகையது தாய் - சேய் பாச பந்தம், இதை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அதே போன்றது தான் பயிருக்கு மழை.

அடிப்பாருக்கு எப்படி நீர் விட்டாலும் பயிரில் செழிப்பைக் காணமுடியாது. மழை கண்டதும் - சிரித்த முகம் மலரும் சேயைப் போலப் - பூத்துக் காய்த்துப் பொலிவு காட்டி நிற்கும்.

உலக வாழ்க்கையில் தந்தை, தாய், சேய் மூவருக்குள்ளும் எவ்வளவு பந்த பாசம், இணைப்புக்கள், துடிப்புக்கள் காணப்படுகின்றன. இது தான் குடும்பம். இவர்கள் இணைந்து ஒரு மனப்பட்டு வாழ்ந்தாலே வாழ்வு மலரும். நல்ல எதிர்கால பிரஜைகள் உதயமாவார்கள்.

# நவராத்திரி

நவராத்திரி விரதம் புரட்டாதி மாதத்தில் வரும் சிறந்த பண்டிகையாகும். இது இந்துப் பண்டிகைகளில் தனிச்சிறப்பு வாய்ந்தது. மகிஷாசுரன் என்ற கொடிய அரக்கனை வதம் செய்ய தேவி ஊசிமுனையில் இருந்து தவம் செய்தாள். அம்பாள் தவம் செய்த ஒன்பது நாட்கள் நவராத்திரி விரதமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

மகிஷாசுரனை வதம் செய்து தேவி வெற்றி கொண்ட பத்தாவது நாள் விஜயதசமி. இந்நாளில் எடுத்த காரியம் வெற்றியுடன் நிறைவேறும். இப்பண்டிகை பெரியவர்கள் தொடக்கம் சிறு பராயத்தினரும் அனுஷ்டிப்பார்கள். குறிப்பாக பள்ளி மாணவர்கள் மிகவும் அக்கறையாக விரதம் இருப்பார்கள்.

குழந்தைகளுக்கு ஏடு துவக்குதல், நடனம், பாட்டு போன்ற கலைகளை விஜயதசமி அன்று ஆரம்பிப்பது வழக்கம்.

வருடத்தில் நான்கு நவராத்திரி வருகிறது. ஆஷாட நவராத்திரி, புரட்டாதி மாதம் சாரதா நவராத்திரி, மகா நவராத்திரி, மற்றும் பங்குனி மாதம் வஸந்த நவராத்திரி. இந்நான்கில் சாரதா நவராத்திரி மற்றும் வஸந்த நவராத்திரி முக்கியமானது ஆகும். ஆனால் பலரும் கடைப்பிடிப்பதும், அறிந்ததும் புரட்டாதி மாதம் வரும் சாரதா நவராத்திரியே ஆகும்.

புரட்டாதி மாத்தில் வரும் சாரதா நவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்க அமாவாசை அன்றே தேவியை கொலு இருக்கச் செய்ய வேண்டும். ஒற்றைப் படையாக அதாவது 9, 7, 5, 3, 1 என்று கொலு படி வைத்து தேவியை - துர்க்கையாக முன் மூன்று நாள், லக்ஷ்மியாக நடு மூன்று நாள், சரஸ்வதியாக பின் மூன்று நாள் வழிபட வேண்டும்.

கொலுவோடு கும்பத்தை நவதானியம் வைத்த தட்டில் வைத்து ஒன்பது நாட்களும் அதற்கும் பூஜை செய்து நீர் ஊற்ற வேண்டும். விஜயதசமி அன்று பார்த்தால் மிக நன்றாக, செழிப்பாக நவதானியங்கள் வளர்ந்து காணப்படும்.

துர்க்காதேவி - கீர்த்தி, மோட்ஷம், மங்களம், சுகம் கொடுப்பவள். எல்லா சக்திகளுக்கும் அவள் ஈஸ்வரி தேவியைப் போற்றி மகிஷாசுரமந்தினி ஸ்தோத்திரம் பாடலாம்.

லக்ஷ்மிதேவி - சம்பத் சொரூபிணி, வேதத்தின்படி அவள் ராஜ்யத்தில் - ராஜலக்ஷ்மியாக, கிருஹத்தில் கிருஹலக்ஷ்மியாக வசிப்பவள். தேவியைப் போற்றி - தேவி பாகவதம் - ஸ்ரீசுக்தம் படிக்கலாம்.

சரஸ்வதி தேவி வெண்நிற ஆடை அணிந்து வீணை கையில் ஏந்திய வாணி.

சரஸ்வதி **தேவி** வாக்கு வன்மை, புத்தி, கல்வி, கலை அளிப்பவள். தேவியைப் **போற்றி தேவி** பாகவதம், சுவாதி தோத்திரம் படிக்கலாம்.

நவராத்திரி நாட்களில் நாம் தேவிக்குப் பிடித்த மலர்களான மல்லிகை, முல்லை, சம்பங்கி, அரளி, மருக்கொழுந்து, சிவப்புச் செம்பருத்தி போன்ற மலர்களால் ஆராதனை செய்ய வேண்டும்.

தினமும் நிவேதனம் செய்ய வேண்டும். பாயாசத்துடன் (அதாவது ஏதாவது ஒரு கஞ்சி - அரிசி, பயறு, கடலைப் பருப்பு போன்றவற்றில்) தினமும் ஏதாவது ஒரு பொங்கல், வெண் பொங்கல், சர்க்கரைப் பொங்கல், கதம்ப அன்னம், புளியோதரை, தயிர் சாதம், எலுமிச்சை சாதம் செய்ய வேண்டும்.

இவற்றைத் தவிர நிவேதனத்தில் பயன்படுத்தப்படும் பொருட்களுக்கு குறிப்பிட்ட பலன்கள் உண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| முதல் நாள் | - | நெல் | - | ரோக நிவர்த்தி |
| இரண்டாம் நாள் | - | சக்கரை | - | ஆயுள் விருத்தி |
| மூன்றாம் நாள் | - | பால் | - | துக்க நிவர்த்தி |
| நான்காம் நாள் | - | பட்ஷணம் | - | விக்ன நிவர்த்தி |
| ஐந்தாம் நாள் | - | வாழைப்பழம் | - | புத்தி அளிக்கின்றது. |
| ஆறாம் நாள் | - | தேன் | - | தேக காந்தி |
| ஏழாம் நாள் | - | வெல்லம் | - | சோக நிவர்த்தி |
| எட்டாம் நாள் | - | தேங்காய் | - | சாப நிவர்த்தி |
| ஒன்பதாம் நாள் | - | நெற்பொரி | - | இகலோக சுகம் |

காலையில் தேவி பூஜை முடிந்த உடன் மாலையில் வீட்டிற்கு கொலுவை பார்க்க - சுமங்கலிகளையும் குழந்தைகளையும் அழைப்பது வழக்கம். இதற்கு வீட்டில் உள்ள பெண் குழந்தைகளை அலங்கரித்து பக்கம் உள்ள வீட்டுப் பெண்களை மஞ்சள், குங்குமம் கொடுத்து அழைக்க அனுப்புவார்கள்.

அவ்வாறு வரும் பெண்கள், குழந்தைகள் எல்லோருமாகச் சேர்ந்து தேவியைப் போற்றிப் பாடி, மகிழ்கிறோம்.

தேவியை குழந்தையாகப் போற்றுவது நவராத்திரியின் சிறப்பு குழந்தை வண்ண வண்ண பொம்மைகளை பார்த்து கை கொட்டி குதிப்பது போல் - தேவி மகிழ்ச்சி யடைகிறாள். நவராத்திரியின் ஒன்பது நாட்களும் தேவி இரண்டு வயது முதல் பத்து வயது உள்ள சின்னப் பெண்ணாக அழைக்கப்படுகிற ஒன்பது நாட்களும் தேவியை அழைக்கும் பெயர்கள்:-

| | | |
|---|---|---|
| முதல் நாள் | - | குமாரிகா |
| இரண்டாம் நாள் | - | திருமூர்த்தி |
| மூன்றாம் நாள் | - | கல்யாணி |
| நான்காம் நாள் | - | ரோகிணி |
| ஐந்தாம் நாள் | - | காளிகா |
| ஆறாம் நாள் | - | சண்டிகா |
| ஏழாம் நாள் | - | ஸாம்பவி |
| எட்டாம் நாள் | - | துர்க்கா |
| ஒன்பதாம் நாள் | - | ஸீபத்ரா |

வீட்டிற்கு வரும் சுமங்கலிகளுக்கும், குழந்தைகளுக்கும் சுண்டல் கொடுப்பது வழக்கம். இதற்குப் பட்டாணி, பயறு போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

குழந்தைகளுக்கு மைசூர்பாகு, லட்டு போன்ற இனிப்புகளும் கொடுக்கலாம்.

சுமங்கலிகளுக்கு தாம்பூலம் கொடுப்பது என்பது ஒரு தெய்வீகமான மரபு. தேவி தாம்பூலம் போட்டுக் கொள்வதில் விருப்பம் அடைகிறாள். மற்றப் பெண்களைத் தேவியாகப் பாவித்து தாம்பூலம் கொடுக்கலாம்.

சுமங்கலிப் பெண்களுக்கு வெற்றிலை, பாக்கு, ம ஞ்சள், குங்குமம், தேங்காய், பழம், ரவிக்கைத் துணி கொடுத்து ஆசீர்வாதம் பெறலாம். சின்னப் பெண்களுக்கு வெற்றிலை, பாக்கு, மஞ்சள், குங்குமம், கண் மை, மலர்ச் சரம், வளையல், பாவாடைத் துணி போன்றவைகள் கொடுக்கலாம்.

நவராத்திரியைப் பாடசாலைகளிலும் கொண்டாடுவார்கள். விஜயதசமி அன்று அலுவலகங்களில், பாடசாலைகளில், தொழிற்சாலைகளில் எல்லாம் மிகவும் விஷேடமாக பூஜைகள் செய்தும், ஆயுத பூஜைகள் செய்து, பிரசாதங்கள் வழங்கியும் கொண்டாடுவார்கள். நவராத்திரி வீரத்திற்கு - செல்வத்திற்கு - கல்விக்கு உகந்த சிறந்த பண்டிகையாகும்.

# தேவிக்கு நிவேதனம் செய்யும் சில கஞ்சிகளின் முறைகள்

## அரிசிக் கஞ்சி

**தேவையான பொருட்கள் :**

| | | |
|---|---|---|
| பச்சை அரிசி | - | 1 கப் |
| கடலைப் பருப்பு | - | ½ கப் |
| சீனி | - | 1½ கப் |
| பால் | - | 4 கப் |
| கஜு | - | 50 g |
| பிளம்ஸ் | - | 50 g |
| ஏலக்காய் | - | 10 |
| உப்பு | - | சிறிதளவு |
| நெய் | - | 4 மேசைக் கரண்டி |

**செய்யும் முறை :**

முதலில் அரிசியையும் கடலைப் பருப்பையும் நன்றாகக் கழுவி ஒரு பெரிய பாத்திரத்தில், நீர் விட்டு நன்றாக வேக விடவும். அதிகம் குழையாமல் இருக்க வேண்டும்.

வெந்தபின் அதை வேறாக எடுத்து வைத்து விட்டு, இன்னொரு பாத்திரத்தில் பாலை ஊற்றிக் கொதிக்க விடவும். பால் கொதித்தவுடன், சீனியைப் போட்டுக் கிளறிக் கொண்டு, சிறிது சிறிதாக வேக வைத்த அரிசிக் கலவையைச் சேர்க்கவும். அதோடு சிறிதளவு உப்பையும் சேர்த்துக் கிளறவும். வெட்டிய கஜுவையும் பிளம்ஸையும் நெய்யில் பொரித்து இதோடு சேர்க்கவும். கடைசியாக ஏலக்காயைப் பொடி செய்து போடவும். கஞ்சி சற்று இறுக்கமாக இருந்தால் பால் சேர்க்கவும். இதுவே அரிசிக் கஞ்சியாகும். சுவையாகவும் இருக்கும்.

# பாசிப்பயறுக் கஞ்சி

**தேவையான பொருட்கள் :**

| | | |
|---|---|---|
| பச்சை முழுப்பயறு | - | 2 கப் |
| பச்சை அரசி | - | 2 பிடி |
| சீனி | - | 3 கப் |
| பால் | - | 4 கப் |
| கஜு | - | 50 g |
| பிளம்ஸ் | - | 50 g |
| ஏலக்காய் | - | 10 |
| உப்பு | - | சிறிதளவு |
| நெய் | - | 4 மேசைக் கரண்டி |

**செய்யும் முறை :**

பயற்றை இரவு நீரில் நன்றாக ஊற விடவும். காலையில் செய்வதனால் இரவில், மாலையில் செய்வதனால் காலையிலும் பயற்றை ஊற விடவும்.

ஊறிய பயற்றையும் பச்சை அரிசியையும் ஒரு பெரிய பாத்திரத்தில் நன்றாக வேக விடவும். பயறு சிறிது குழைய வேண்டும்.

வெட்டிய கஜு, பிளம்ஸ் இவைகளை நெய்யில் வறுத்துக் கொள்ளவும். ஏலக்காயைப் பொடி செய்யவும். பயறு வெந்தவுடன், சிறிது உப்பைப் போட்டு நன்றாகக் கிளறி பாலையும் சீனியையும் சேர்க்கவும். கொதி வந்தவுடன் நெய்யில் பொரித்த கஜு, பிளம்ஸ் இவைகளையும் சேர்த்து இறுதியாக ஏலப்பொடியையும் சேர்க்கவும்.

இதுவே பாசிப்பயறு கஞ்சியாகும். உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் சிறந்தது. பித்தம், சூடு முதலியவைகளைத் தணிக்கும். சுவையாகவும் இருக்கும். அம்பாளுக்கும் விருப்பமானது.

# கிழங்கு பட்ஜி

**தேவையான பொருட்கள் :**

| | | |
|---|---|---|
| கடலை மா | - | 1 சுண்டு |
| மிளகாய்த் தூள் | - | 1 ½ மேசைக்கரண்டி |
| உப்பு | - | சிறிதளவு |
| பெருங்காயப் பவுடர் | - | ½ தேக்கரண்டி |
| கிழங்கு | - | ½ கிலோ |
| எண்ணெய் | - | தேவையான அளவு |

**செய்யும் முறை :**

முதலில் கிழங்கை துப்புரவு செய்து மெல்லிய வில்லைகளாக அதாவது வட்டமாக வெட்டிக் கொள்ளுங்கள். வெட்டிய கிழங்கை சிறிது உப்பு கலந்த நீரில் போட்டு வைத்துக் கொள்ளுங்கள்.

கடலைமா, மிளகாய்த் தூள், பெருங்காயத் தூள், உப்பு எல்லாவற்றையும் சேர்த்து மாவை நீர் விட்டுக் கரைக்கவும். தண்ணீராக கரைக்கக் கூடாது. ஓரளவு தடிப்பாக இருக்க வேண்டும்.

அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெய்யை ஊற்றி, கொதித்தவுடன் ஒவ்வொரு கிழங்கு வில்லைகளாக எடுத்து, மாவில் தோய்த்து, எண்ணெயில் போட்டு பொரித்து எடுக்கவும். இது தான் கிழங்கு பட்ஜீ. கிழங்கு மட்டுமல்ல வாழைக்காய், வெங்காயம், கத்தரிக்காய், கறி மிளகாய் போன்றவற்றிலும் செய்யலாம்.

# பெற்றதாய்

"தாயிற் சிறந்த கோவிலுமில்லை" என்பார்கள். தாய், தெய்வத்திற்கு ஒப்பானவள். உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையின் வாயிலிருந்து வரும் முதல் மழலைச் சொல் அம்மா. அம்மா என்று சொல்லும்போது உடல் புல்லரிக்கும். அந்தச் சொல்லுக்குத் தான் எத்தனை சக்தி உண்டு. தாய் என்ற ஸ்தானம் மிகவும் சக்தி வாய்ந்ததும் பொறுப்பானதும் ஆகும். பத்து மாதம் சுமந்து பெற்று, தன் உதிரத்தை பாலாக்கி, இரவு என்றும் பகலென்றும் பாராமல் ஊட்டி வளர்க்கிறாள். வயிற்றில் கருவைச் சுமந்தவுடன், என் குழந்தைக்கு இது கூடாது, அது கூடாது என்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிறாள்.

பெற்றவுடன் கண்ணுங்கருத்துமாக வளர்க்கிறாள். நல்ல பழக்கங்கள் வரவேண்டும், படிப்பு வரவேண்டும் என்று சொல்லிக் கொடுப்பாள். ஓரளவு வளர்ந்தவுடன் பாடசாலை அனுப்புகிறாள். பாடசாலையிலிருந்து வரும்வரை உணவை வைத்துக் கொண்டு வழிமேல் விழி வைத்துக் காத்திருப்பாள். இந்தக் குழந்தைப் பருவம் கடந்து பெரியவர்களானதும், பிள்ளைகள் என்ன படிப்பு படிப்பார்கள், டாக்டராவார்களா ? இஞ்ஜினியராக வருவார்களா? ஆசிரியையாக வருவார்களா? என்று அல்லும் பகலும் சிந்திப்பாள்.

அப்பாடா, பிள்ளைகளின் படிப்பு முடிந்து வேலையாகிவிட்டது. இனித் திருமணம் செய்யும் படலம் வந்து விட்டது என்று தேடத் தொடங்குவாள். அம்மா பிள்ளைகளுக்கு நல்ல வாழ்க்கை அமைய வேண்டும் என்று கோயில்களுக்குப் போவாள். தெய்வங்களை வேண்டிக் கொள்வாள். பிள்ளைகளுக்குத் திருமணம் முடிந்து கணவரும் ரிட்டையர் ஆனவுடன், அப்பாடா, எங்கள் பொறுப்புகள் ஒரு பாடாக தீர்ந்தது என்று நிம்மதிப் பெருமூச்சு விடுவாள். ஆனால் சிறிது காலம் செல்லும் முன் அம்மா என் பிள்ளையைப் பார்த்துக் கொள்கிறாயா? நான் வேலைக்குப் போக, கடைக்குப் போக அல்லது வெளியூர் போக என்று வருவார்கள். வெளிநாடுகளில் உள்ளவர்கள் நான்கு சுவருக்குள் அம்மாவையும் பிள்ளையையும் வைத்துவிட்டு வேலைக்குப் போய் விடுவார்கள். அம்மா என்றால் எல்லாம் செய்பவள் தான், வளர்ப்பது மட்டுமல்ல கஷ்டங்களை, மனஸ்தாபங்களை எல்லாம் தீர்த்து வைப்பாள். ஆனால் பிள்ளைகள் நன்றாக இருந்தால் மனநிறைவோடு பார்த்துப் பார்த்து பூரிப்படைபவளும் அம்மாதான்.

ஆனால் அம்மாவுக்கும் மனமுண்டு, அதில் சின்னச் சின்ன ஆசைகள் உண்டு என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அவளும் திருமணமான காலம் தொடக்கம் கணவனுக்காக, மாமனார், மாமியார், பிள்ளைகளுக்காக என்று மாடாய் உழைத்துத் தேய்ந்து சலித்துப் போயிருக்கிறாள். சிறிது காலம் ஓய்வு கொடுத்து அம்மாவின் ஆசைகளை நிறைவேற்ற வேண்டும்.

கோயில் போக விரும்புவார்கள். அமைதியாக இருந்து பக்திப் பாடல் கேட்கவோ, பகவத்கீதை படிக்கவோ, அல்லது படம் பார்க்கவோ விரும்புவார்கள். இன்னும் சொல்லப் போனால், தன் வயதொத்தவர்களோடு பேசிப் பழக, பஜனைக்குப் போக, கலாட்சேபம்

கேட்கப் போக என்றெல்லாம் விரும்புவார்கள். ஆனால் வீட்டிலோ பேரக்குழந்தையைப் பார்க்க வேண்டும். சமைக்க வேண்டும் என்று பயந்து வாழும் அம்மாக்களும் உண்டு. சிலர் நேரமிருந்தாலும் அம்மாவைக் கோயில் கூட்டிப் போவதை விட, தங்கள் நண்பர்கள் வீட்டிற்குப் போவது சரியென்று எண்ணுவார்கள்! அம்மாவும் வாரக் கணக்கில் வீட்டில் அடைபட்டுக் கிடக்கிறாள், வெளியில் கூட்டிப் போக வேண்டும் என்று எண்ணமாட்டார்கள்!

ஏன் புடவைக் கடைக்குப் போனால்கூட அம்மா தானே, ஏதாவது ஒன்றை வாங்கிக் கொடுப்போம் என்று எண்ணுவார்களா? அவளுக்கும் தனக்கு விரும்பிய கலரில், டிசைனில் புடவை வாங்க ஆசையாக இருக்கும். இவைகள் எல்லாம் அம்மாவின் சின்னச் சின்ன ஆசைகள், பிள்ளைகளிடம் எப்படிக் கேட்பது ? எத்தனையோ தேவைகளை, இளமையில் நிறைவேறாத ஆசைகளை எல்லாம் மனதில் பூட்டி வைத்திருப்பார்கள். ஐம்பதிலும் ஆசை வரும். உடலுக்குத் தான் வயது. மனதுக்கு அல்ல. மனம் என்றும் இளமையாகத் தான் இருக்கும்.

நீங்களும் பெற்றோராகி விட்டீர்கள். உங்களுக்கும் வயதாகி, பேரக்குழந்தை பார்க்கும் நிலை என்று வரலாம். சிந்தித்துப் பாருங்கள். அம்மா எனக்கு எப்படியெல்லாம் பாடுபட்டார்கள். பக்கபலமாக இருந்தார்கள். நான் அம்மாவை நன்றாகப் பார்த்தேனா? அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றினேனா? வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட அம்மாவை ஆறுதலாக இருக்க வைத்து உபசரித்தேனா? என்று.

அம்மாவுக்கும் வயதின் முதிர்ச்சி, தள்ளாமை, சோர்வு ஏற்படலாம். அவர்களுக்கும் ரெஸ்ட் முக்கியம். அம்மாவை நன்றாக ஓய்வெடுக்க விடுங்கள். அவர்களின் புத்திமதிகளை, அபிப்பிராயங்களைக் கேளுங்கள். அம்மாவுக்கு வயதாகிவிட்டது. என்ன தெரியும் என்று எண்ணாதீர்கள். பெற்றவர்களுக்கு மதிப்புக் கொடுங்கள். முதுமைக்கு உள்ள திடம் இளமைக்கு கிடையாது.

தாயின் மனம் குளிரக் குளிர, எங்களை வாழ்த்துவாள். ஆசீர்வதிப்பாள். மானிட வாழ்க்கையில் குழந்தையில்லாதவர்கள் குழந்தை தத்து எடுக்கலாம். ஆண்கள் பல மனைவிகளைத் தேடலாம். ஏன் விதவைகூட மறுமணம் செய்தால் கணவன் கிடைக்கலாம். ஆனால் பெற்ற தாய், தந்தை, சகோதரம் இவற்றை ஒரு முறை தான் பெறலாம். வேறு எந்த வழியிலும் பெறமுடியாது. மனிதர்கள் வாழ்வது சில காலம் தான். அதற்கிடையில் எத்தனையோ துன்பங்கள், கஷ்டங்கள், இடையூறுகள், பிரிவுகள் வந்து விடும். ஒவ்வொரு பருவத்திலும் விதவிதமான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். ஆனால் எவ்வளவு துன்பங்கள் வந்தாலும் பெற்றோர்களும் சகோதரர்களும் எங்களுக்கு அன்புக் கரம், உதவிக் கரம் நீட்டி, துன்பங்களை நீக்கி உதவி செய்வார்கள். ஆகையால் வாழக்கையில் பெற்றோரையும் சகோதர்களையும் போற்றி மதிப்பதை என்றும் கடைப்பிடிக்க வேண்டும்.

**திலகா தர்மராசா**

# பாசத்தின் விளைவு

கட்டில் மெதுவாக அதிர்ந்தது. கிச்சன் வேலையை முடித்து விட்டு வானி வந்து விட்டாள் போல ... சங்கர் கண்களை இறுக்கமாய் மூடிக்கொண்டான்.

"நாள் பூராவும் ஆட்டம் போட்டுட்டு ஒரு வாய் சாதம் கூடச் சாப்பிடாமல் தூங்கிறதைப் பாரு"

கட்டிலின் ஒரு ஓரத்தில் தூங்கின நாலு வயசு மகளைப் பற்றிப் புலம்பிக் கொண்டே படுக்கையில் சரிந்தாள் வாணி. அவளது எட்டு மாத சூல் வயிறு, சங்கரனை லேசாய் இடித்தது.

"என்னங்க, அதுக்குள்ளேயா தூங்கீட்டிங்க. சாப்பிட்டுவிட்டு இப்பதான் வந்தீங்க". பேச்சோடு நிற்காது அவனது தோளைப் பிடித்து அசைக்கவும் வேறு வழியின்றி கண் திறந்தான் சங்கரன்.

"தூக்கம் வருது வாணி, டிஸ்ரடப் பண்ணாதே".

"அப்போ இன்றைக்கும் உங்க அம்மாவுக்கு லெட்டர் எழுதலை. அப்படித்தானே?"....

வாணியின் குரல் இறுக்கமாய் ஒலித்தது. சங்கரன் மௌனம் காத்தான்.

"பானை மாதிரி வயித்தை வச்சிக்கிட்டு நான் இங்க வீட்டு வேலை அத்தனையும் பண்ணிக்கிட்டு கிடக்கிறன். சமயத்தில் மூச்சு வாங்கி... மூச்சுவாங்கி நெஞ்சே வெடிச்சிடும் போல இருக்கு. டெலிவரி டைம்மாவது உங்கம்மாவை வரச் சொல்லுங்கோ என்று கேக்கிறன். அது தப்பா? எப்பவும் உங்களுக்கு உங்கம்மான்னா உசத்தி தான்".

ஆத்திரத்தில் ஆரம்பித்து அழுகையில் முடிந்தது, அவளின் வார்த்தைகள். சங்கருக்கு தலைவலி ஆரம்பமாயிற்று. வாணியின் பெற்றோர் வசதியானவர்கள்தான். இதே நகரத்தில் இருப்பவர்கள். ஒன்றுக்கு இரண்டு வேலையாள் வைக்கக்கூட சங்கர் தயாராக இருந்தான்.

ஆனால் வாணி திருச்சிக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்தில் தன் புருஷனோடு இருக்கிற தன் மாமியாரை இங்கே வரவழைப்பதிலேயே குறியாக இருந்தாள்.

அம்மாவை வரச் சொல்லி எழுதினால் நிச்சயம் வரத்தான் செய்வாள். ஆனால் சங்கரனுக்கு மனசில்லை. அதற்குக் காரணமும் இருந்தது.

ஓடியாடி வேலை செய்த அப்பா படுக்கையில் விழுந்து நாளாகிறது. அவரைக் கவனிக்க நிச்சயம் அம்மா அங்கே வேண்டும். அம்மா பூச்சி மாதிரி. என்ன அநியாயம் நடந்தாலும் எதிர்க்கேள்வி கேட்க யோசிக்கும் ரகம். எந்த வீட்டு வேலையையும் இழுத்துப் போட்டு முகம் சுளிக்காது செய்கிற மனசு.

ஏற்கனவே அவர் ஒரு முறை வந்து தங்கி விட்டு போயிருக்கிறார். சங்கரன் அத்தனையையும் பார்த்திருக்கிறான். அதனால் தான் இப்போது யோசனை.

கொஞ்சம் பார்த்து நடந்துகொள் என்று வாணியைக் கேட்டுக் கொள்ள முடியாது. அவ்வளவுதான். பிரளயம் வரும்.

பக்கத்தில் படுத்திருந்த வாணியிடமிருந்து தொடர்ந்து விம்மல்கள் கேட்டுக் கொண்டேயிருந்தன.

இறுதியாக சங்கரன் அவளிடம் தோற்றுப் போனான்.

அம்மாவுக்குக் கடிதம் எழுதினான். உள்ளுக்குள் அவனுக்கே குற்ற உணர்ச்சி இருந்தது. அப்பா படுக்கையில் விழுந்த பிறகு போய்ப் பார்க்கவேயில்லையே.....

ஆனால் அம்மா .... அம்மா தான். வாணியின் பிரசவத்திற்குக் குறிக்கப்பட்ட தினத்துக்குப் பத்து நாட்களுக்கு முன்பே வந்து விட்டாள். இந்தத் தள்ளாத வயதிலும் முறுக்கு, சீடை, நெய் உருண்டையென்று தகர டப்பாக்களோடு அமர்க்களமாய் வந்து இறங்கினாள்.

அம்மா இதே சந்தோஷத்தோடு திரும்பிப் போக வேண்டுமென்று கவலை சங்கருக்கு வந்தது. அம்மா வந்ததும் வாணி குஷியாகிப் போனாள். அம்மாவும் அவளை உட்கார வைத்துவிட்டு தானே அத்தனை வேலைகளையும் செய்தாள்.

நாலு வயசுப் பேரனுடன் விளையாடினாள். வாணிக்குப் பெண் குழந்தை பிறந்தது. சுகப் பிரசவமான படியால் ஒரு வாரத்தில் வீடு திரும்பினாள்.

வாணியின் பெற்றோர், உறவுக்காரர்கள் என்று வீடே சந்தைக்கடையாயிற்று.

என்னதான் காஸ் ஸ்ட்வ் ஆனாலும் காபி போட்டு, டிபன் செய்து அவ்வப்போது பச்சை உடம்புக்காரிக்கு, குழந்தைக்கு என்று சுடு தண்ணீர் வைத்து அம்மா களைத்துப் போனாள்.

மத்தியானம் மூன்று மணி, எதற்காகவோ கிச்சனுக்கு வந்த சங்கரன் சுவரோடு சாய்ந்து சரிந்து உட்கார்ந்திருந்த அம்மாவைக் கண்டதும் பதறிப்போனான்.

"அம்மா... அம்மா" களைப்பாய் கண் திறந்தாள் அம்மா. "என்னம்மா என்னாச்சு? ஏன் இங்க உட்கார்ந்து விட்டாய்?" "ஒண்ணுமில்லையப்பா..... ஏதோ கொஞ்சம் அசதியா இருந்திச்சு. என்ன, எதுவும் வேணுமா?" என்று கேட்டாள்.

“ஒண்ணும் வேணாம்மா, கொஞ்ச நேரம் படுத்து ஓய்வு எடேன்.”

“எங்க படுக்கிறது. அப்படியே நான் படுத்தாலும் அடுப்புக் காரியத்தையெல்லாம் யார் பார்ப்பா?”

அம்மா சாதாரணமாகத்தான் சொன்னாள். ஆனால் சங்கருக்குள் சுருக்கென்று குத்தியது. இந்த ஒரு மாதமாய் அம்மா இங்கே வேலைக்காரியாகத்தானே இருக்கிறாள்.

“என்ன மாமா, நீங்க இங்க இருக்கிறீர்களா?” வாணியின் தங்கை கையில் ஒரு பிளாஸ்குடன் வந்தாள்.

“மாமி, இது நிறைய காப்பி போட்டுக் குடுப்பீங்களாம். இன்றைக்குச் சனிக் கிழமையாச்சே, குட்டிப் பட்டாளமெல்லாம் இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துவிடும். அதனாலே கொஞ்சம் கேசரி செய்யச் சொன்னாள் வாணி.”

சங்கருக்கு ஆத்திரம் வந்தது.

“ஏன்? அம்மா ஒண்டியாக இங்க கஷ்டப்பட்டுக்கிட்டு இருக்கிறா, நீங்க யாராச்சும் வந்து உதவி பண்ணினா என்ன?”

அவள் தோளைக் குலுக்கிச் சிரித்தாள். “மாமியோட அனுபவத்திற்கு நாங்களெல்லாம் கிட்ட நிற்க முடியுதே?”

போய் விட்டாள்.

இத்தனைக்கும் அம்மா ஒரு வார்த்தை பேசவில்லை. அடுப்பில் காப்பிக்குத் தண்ணீர் வைத்துவிட்டு பல சரக்கு அலுமாரிகையைக் குடைந்து கொண்டிருந்தாள்.

“அம்மா!...”

“என்னடா...”

“அப்பாவுக்கு லெட்டர் எழுதிறாயா?”

“இல்லேடா, பாவம், அவர் வேற தவிச்சுக் கொண்டிருப்பார். அடுத்த வாரத்துல எனக்கு டிக்கெட் எடுத்துத் தாரியா...”

“இவ்வளவு சீக்கரம் போகணுமாம்மா?” கேள்வி இப்படியிருந்தாலும் மனசுக்குள் வாணி என்ன சொல்லுவாளோ என்ற யோசனை வந்தது.

“இவ்வளவு சீக்கரமா போக என்று நான் வரவில்லை சங்கர். ஆனால் எனக்கு மனசே சரியில்லையடா. வீணாகப் பிறத்தியாரைக் குறைபட்டுக் கொள்வதை விட நாம் ஒதுக்கிக் கொள்வது உத்தமம்.”

"அம்மா..."

"உன்னை நான் குற்றம் சொல்லவில்லை. ஆனால் உன் மேலேயும் வருத்தம் இருக்கு. உன் பொண்டாட்டிக்கு உதவி செய்ய ஆள் தேவை என்று என்னைக் கூப்பிட, நானும் ஒரு அம்மாவா, ஒரு தாய்க்குரிய பாசத்தோட இங்க வந்தேன். படுக்கையில கிடக்கிற புருஷனையும் விட்டுவிட்டு வந்தேன். மனைவிங்கிற ஸ்தானத்தை தாய்மை ஜெயிச்சதாலதான். ஆனால், நீங்க எல்லாரும் இதை என் பலவீனமாக நினைத்திருக்கிறீர்களே?"

"ஏண்டா..."

"இல்லையம்மா வாணி தான் என்னைக் கட்டாயப்படுத்தினாள்..."

"அவமேலே மட்டும் பழிபோடாதே சங்கர். உனக்கெங்க அறிவு போச்சு? என்னைக் கூப்பிட்டது தப்பில்லை. ஆனால் ஸ்டார் ஹோட்டல் கிச்சன் இன்சார்ஜ் மாதிரி என்னை ஆக்கிட்டாங்கள். அது தான் வருத்தம். ஒரு அம்மான்னா எந்த அவமானத்தையும் எந்தத் துன்பத்தையும் சகிப்பா, சகிக்க வேணும் என்று நீங்களெல்லாம் நினைத்து விட்டீர்கள் இல்லையா?"

அம்மாவின் கேள்விக்கு சங்கரிடம் பதில் இல்லை.

"நான் அம்மாவாக இருந்தது போதும். இனி நான் என் புருஷனுக்குப் பொண்டாட்டியாக இருந்து கவனித்துச் சாகவேணும். உங்க எல்லாரையும்விட அவருக்குத்தான் என் உதவி இப்ப தேவை. எனக்கு டிக்கெட் ரிசர்வ் பண்ணி விடு."

அம்மா தீர்மானமாகச் சொல்லிவிட, சங்கரனின் பாரம் நீங்கியது போலிருந்தது. நிம்மதியாய் எழுந்து போனான்.

# வாழ்க்கையில் படிப்படியாக

தந்தையார் தன்னைக் கூப்பிட்டதும் குமரன் உடனே ஓடிச் சென்று "என்னப்பா," என்றான்.

"பாங்க் ஒன்றிற்கு விண்ணப்பிக்கச் சொல்லி, நேற்று ஒரு படிவம் கொடுத்தேனே, என்ன செய்தாய்?"

"அது பாங்க் பியூன் வேலையப்பா. போயும் போயும் பியூன் வேலைக்கா போவாங்க?"

"என்னடா? பியூன் வேலை என்றால் அவ்வளவு இளக்காரமாகப் போய்விட்டதா உனக்கு? என்ன சம்பளம் தெரியுமா? எடுத்த உடனேயே ஆயிரத்து நூறு வரை கிடைக்குமே."

"எனக்குப் பிடிக்கவில்லையப்பா. நான் பிளஸ் டூ பாஸ் பண்ணியிருக்கிறேன். தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஏன் கம்பியூட்டர் கூட பாஸ் பண்ணியிருக்கிறேன். என்னைப் போய் பியூன் வேலைக்குப் போகச் சொல்கிறீர்களே?"

ராகவனுக்கு மகன் குமரனின் பிடிவாதம் கோபத்தையும், வேதனையையும் தந்தது. குடும்ப நிலைமை தெரியாமல், பிழைக்கத் தெரியாதவனாக இருக்கிறானே என்று மனதுக்குள் மிகவும் வருத்தப்பட்டார். தன்னுடைய ஓய்வு காலத்தில் மகன் சம்பாதித்து காப்பாற்றுவான் என்று எண்ணிய எண்ணம் வீணாகி விடுமோ என்று அஞ்சினார். மீண்டும் அவனிடம் பேச வாயெடுத்து நிமிர்ந்தபோது குமரன் அங்கிருந்து நழுவி விட்டான். அருகிலிருந்த அவனது மேஜையில் விண்ணப்பப்படிவம் கேட்பாரற்றுக் கிடந்தது.

அன்று மாலை, மார்க்கட்டில் மளிகைச் சாமான்கள் வாங்கிக் கொண்டு வீடு திரும்ப, எதிரிலிருந்த பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸிக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள் குமரனும் தந்தையும். இருவர் கைகளிலும் சாமான்களின் சுமை. முக்கால் மணி நேரமாக பஸ் வரவில்லை. மாலை நேரமாகையால், வீடு திரும்புவோரின் கூட்டம் வர வர கூடிக் கொண்டேயிருந்தது.

மீண்டும் பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு பஸ் ஊர்ந்து வந்து நின்றது. பஸ் படிக்கட்டுகளில் பயணிகள் தொங்கிக் கொண்டிருந்தனர். ஒருவரும் இறங்குகிற வழியைக் காணோம்.

குமரன் தந்தையை அவசரப்படுத்தினான். "வாங்கப்பா சீக்கிரம்." "ம் என்ன குமரா? இந்தக் கும்பலில் எப்படிப் போவது? கால் வைக்கக் கூட இடமில்லை. கூட்டமில்லாமல் காலியாக வரும்போது போகலாம்."

"என்னப்பா நீங்க? எப்ப இந்த ரூட்டில் பஸ் கூட்டமில்லாம வந்திருக்கு? எல்லா பஸ்சும் இப்படித்தான் இருக்கும். பஸ் எப்போ காலியா வந்து, நாம எப்போ வீடு போய்ச் சேருவது? ஏறுங்கப்பா, காலைக் கொஞ்சம் ஊன்றிக் கொண்டால் போதும். அடுத்தடுத்த ஸ்டாப்பில் ஒவ்வொருத்தராக இறங்க ஆரம்பித்ததும் சௌகரியமாக நிற்கலாம். உட்காரலாம். எனக்குப் பசிக்கிறது சீக்கிரம் வீடு போகனும், வாங்கப்பா!"

தகப்பனாரை அவசரப்படுத்தி பஸ்ஸில் குமரன் தொற்றிக் கொண்டு, அவரை தொற்றிக் கொள்ளச் செய்தான். சிறிது தூரம் சென்ற உடன் பிரயாணிகள் இறங்க ஆரம்பித்தனர். சிறிது நேரத்தில் குமரனும் தந்தையும் மெல்ல படிகளிலிருந்து அமர இருக்கை கிடைத்தது.

ராகவன் மகனைப் பார்த்து "குமரா! என்ன சொன்னாய்? காலை ஊன்றிக் கிட்டாப் போதும் என்றா? அதே மாதிரித் தான் நமது வாழ்க்கையில் வேலையும்."

"நாம் படித்ததற்கு தகுந்த மாதிரி வேலை வரட்டும் என்று காத்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, ஆரம்பத்தில் கிடைக்கிற வேலையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, ஊன்றி விட்டோமென்றால் போகப் போக அனுபவங்களும், பயிற்சியும் கிடைக்கும். ஓய்வு பெறுபவர்கள் ஒதுங்க ஒதுங்க நம் முயற்சிக்கேற்ப படிப்படியாக பதவி உயர்வும் கிடைக்கும். நமக்கேற்ற வேலையும் கிடைத்தாகிவிடும்."

பஸ்ஸினுள் இடிபாடுகளுக்கிடையே சிக்கித் தவித்துக் கொண்டிருந்த குமரனுக்குத் தந்தையின் விளக்கம் நன்கு புரிந்து, உள்ளத்தில் ஏதோ உறைத்தது.

வீடு போய்ச் சேர்ந்ததும் முதல் வேலையாக, தந்தையின் விருப்பத்திற்கேற்ப பியூன் வேலைக்கான விண்ணப்பத்தை முறையாகப் பூர்த்தி செய்ய ஆரம்பித்தான்.

# பட்டுப் புடவையால் வந்த வினை

“என்னப்பா ராம்! ஒரே டல்லா இருக்கிறாய்? வீட்டிலே ஏதும் கசமுசாவா?” கிண்டலோடு கேட்ட சிவாவை ஓங்கி அறையனும் போல இருந்தது. அவனைக் கடுமையாக முறைத்தேன்.

ஆனால் இவனை விட்டாலும் மனம் விட்டுப் பேச வேற ஆளும் கிடையாது. இவன் மீது நான் தான் அடிக்கடி எரிந்து விழுந்தாலும் உண்டியலைக் கொட்டுகிற மாதிரி உள்ளத்தை இவனிடம் நான் அடிக்கடி கொட்டித் தீர்ப்பேன்.

“உம் சரி, இப்ப நீ ஒண்ணும் சொல்ல மாட்டே. லஞ்ச் அவர்ல நீயாவே வருவே”, என்று சொல்லிக் கொண்டு போய்விட்டான்.

என்னத்தைச் சொல்வது? போனமாதம் அம்மாவுக்கு உடம்பு வருத்தம், அவசரமாக இருநூறு ரூபா அனுப்பி வை அண்ணா, என்று விஜி லெட்டர் போட்டிருந்தா.

என் மனைவி ரேவதி மிகவும் துணிச்சலாக, “இங்க நாங்களே கடன் வாங்கி குடும்பம் நடத்துகிறோம் மாமி. உங்க நிலை கண்டு நானும் அவரும் ரொம்ப வருந்துகிறோம் மாமி” என்று லெட்டர் போட்டு விட்டாள்.

பாவம் அம்மா என்ன நினைத்திருப்பா? அவ நினைத்தாலும் நினைக்காவிட்டாலும் தங்கை விஜி கூடவா நினைக்கமாட்டாள்?

ரேவதி சுத்த மோசம். ஆயிரத்து ஐந்நூறு ரூபா ஓவர் டைம் பணமாக வந்திருக்கு. ஒரு இருநூறு ரூபா அனுப்பினா என்ன? எவ்வளவோ சொல்லியும் மனதைக் கரைக்க முடியவில்லை.

“இதோ பாருங்க, தீபாவளி நேரத்தில் கூட சிம்பிளா ஒரு பட்டுப் புடவை வாங்காவிட்டால் எப்படி? பெரிதாக இல்லாவிட்டாலும் சுமாரான ரகத்திலாவது ஒரு பட்டுப் புடவை எடுத்தே ஆகனும். உங்கம்மா பணம் கேட்டு எழுதியிருந்தாங்க. எப்பவும் உடம்புக்கு வர்றது சகஜம் தான். ஆனால் இப்படி வருஷத்திலே ஒரு தரம் தான் பட்டுப் புடவை வாங்க சான்ஸ் வரும்,” விடாப் பிடியாக நின்றாள்.

அவனால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. ரேவதியின் நச்சரிப்பும் தாங்கவில்லை.

இந்த லட்சணத்தில் இருபத்திமூன்றாம் திகதி ஒரு இண்டர்வியூ இருக்கு என்று, அம்மாவைத் தனிய விட்டு விட்டு, ஒரு வாரத்துக்கு முந்தியே ஊரிலிருந்து தங்கை விஜி வந்து விட்டாள்.

இப்ப அவளை விட்டு விட்டு எப்படி ரேவதிக்கு மட்டும் பட்டுப் புடவை எடுப்பது? விஜி எனக்கு ஒரே தங்கை. அவளுக்கு ஒரு சாதாரண நைலக்சாவது எடுத்துக் கொடுக்காவிட்டால் நாகரீகமா?

இது தான் ராம் வீட்டுப் பிரச்சினை.

மதியம் சாப்பாட்டு வேளை. ''அட, இது தானா பிரச்சினை. கவலையை விடு பிரதர். பட்டுப் புடவை பட்ஜெட்டை குறைச்சிட்டு தங்கச்சிக்கு ஒன்று எடுத்துக் கொடுத்து அனுப்பு. அதை விட்டுவிட்டு அழுகிறாயே'', என்று நண்பன் சிவா கேலி செய்தான்.

''நீ சுலபமாக சொல்லிவிட்டாய் சிவா. என் மனைவியை அவ்வளவு சீக்கிரத்தில் சமாதானம் பண்ண முடியாதப்பா!''

''எல்லாப் பொம்பளையும் அப்படித்தான். நாம அமைதியாக இருந்தா எகிறிக் குதிப்பாங்க. நம்ம நிமிர்ந்தால் மடங்கிடுவாங்க. நீ நிமிர்ந்து பேசு, அப்புறம் பார். காட்டன் புடவை எடுத்துக் கொடுத்தாலே போதும் என்று சொல்வாங்க.''

ராம் நண்பன் தந்த நம்பிக்கையோடு வீடு திரும்பியதும், விஜி அடுத்த அறையிலிருந்த சமயம் பார்த்து ரேவதியிடம் விவரத்தைச் சொல்ல, அவள் வெடித்தாள்.

''விளையாடுகிறீர்களா? இருநூறு ரூபா உங்கம்மா கேட்டதற்கு இல்லையென்று அழுதுவிட்டு, இப்ப உங்க தங்கச்சிக்கும் சேர்த்துப் புடவை எடுக்கச் சொல்கிறீர்களே. புத்தி என்ன பிசகி விட்டதா? இங்க பாருங்கோ! விஜி 23ம் திகதி இன்டர்வியூவை முடித்து விட்டு அன்றைக்கே ஊர் போறாளாம். வீணாக ஜவுளி எடுக்கிறதைப் பற்றி இப்ப பேச வேண்டாம். பேசினா அவளுக்கும் ஒரு புடவை எடுக்க வேண்டி வரும்.

ரேவதி தன்னை மறந்து சத்தமாகப் பேசியிருக்க வேண்டும். அறை வாசலில் விஜியின் குரல் ஒலிக்க, இருவரும் திடுக்கிட்டுத் திரும்பினார்கள்.

"எனக்குத் தேவையில்லை அண்ணி - போன மாதம் சின்ன அண்ணாவோட மைத்துனர் பாரினில் இருந்து வந்தபோது, அவர் எனக்கும் அம்மாவுக்கும் இரண்டு புடவைகள் கொடுத்து அனுப்பியிருந்தார்.''

"நீங்க எனக்கு இப்ப புடைவை எடுக்கிறது அநாவசியம் அண்ணா! அண்ணிக்கும் பட்டுப் புடைவை என்றால் ஆசையிருக்காதா? அவங்க ஆசைப்பட்டதை வாங்கிக் கொடுங்க அண்ணா"

"அதுக்கில்லை விஜி..." ராம் இழுத்தான்.

"நீ தப்பாய் புரிஞ்சிக்கிட்டாய் விஜி, நான் என்ன சொல்றேன்ன..."

"ஒண்ணும் சொல்ல வேணாம். இப்பவே கடைக்குப் புறப்படுங்க. நானும் வர்றேன். உங்களுக்குப் பிடித்ததை, பிடித்த கடையிலே வாங்கிக் கொண்டு வருவோம்."

"விஜி!..."

“பேச்சு வேணாம். நான் உன்னைத் தப்பா நினைக்க மாட்டேன். அண்ணியோட ஆசை நிறைவேறினால் அதுதான் என் மனசுக்கும் திருப்தி.”

படபடவெனப் பேசியவளிடம் எதுவும் பதில் பேச முடியவில்லை.

ராம், ரேவதி இருவரும் விஜியுடன் புறப்பட்டார்கள்.

பேசாமல் இருந்த ரேவதி - பஸ் ஸ்டான்ட் வந்ததும் தோளை இடித்தாள்

“ஏங்க,”

“என்ன?”

“எங்க அப்பாகிட்ட இன்னும் ஒரு ஐநூறு ரூபா வாங்கி வந்து - ரெண்டாயிரத்துல புடைவை எடுத்தா சூப்பராக இருக்கும்.”

“உனக்குப் பேராசை தான்! இப்ப திடீர் என்று போய் கேட்டா, அவங்களால தர முடியுமான்னு யோசி.”

“நீங்களும் விஜியும் பட்டு மாளிகை வாசல்ல நில்லுங்க. நான் போய் வாங்கிட்டு வந்து விடுவேன். போறன். அருகிலுள்ள உஸ்மான் றோட்டில் தான் அப்பா வீடு.”

ராமும் விஜியும் அரைமணி நேரமாகக் காத்திருந்தும் - ரேவதி வந்த பாடில்லை.

அப்போது எதிரே வீதியில் ஒரே கூட்டம். ஓடிப்போய்ப் பார்த்தால் ஆக்ஸிடெண்ட். டவுண் பஸ் குறுக்கே பாய்ந்த ரேவதி - பஸ்ஸில் சிக்காமல் தப்பி பஸ்சை ஓவர்டேக் செய்து வந்த டாக்சியில் சிக்கி இருக்கிறாள்.

ஓடிப்போய் பார்த்த இருவருக்கும் ஒரே ஷாக். இரத்தம் சிந்திக் கிடந்த ரேவதியை அள்ளிப் போட்டுக் கொண்டு ஆஸ்பத்திரியில் சேர்த்து, டாக்டர் எழுதிய பட்டியற் படி மருந்துகளை வாங்கி, ரேவதியைக் குணப்படுத்தி வீட்டுக்குக் கூட்டி வர மூன்று நாட்களாகி விட்டது.

பட்டுப் புடைவை எடுக்கக் கொண்டு சென்ற பணம் டாக்டரிடமும், மருந்துகளிலும் கரைந்து விட்டிருந்தது.

ரேவதி அழுது கொண்டிருந்தாள். மாமியாருக்கு ரூபா 200 கூட தர மனமில்லாமல் ஆர்ப்பாட்டம் பண்ணியதை நினைத்து!

ஹெட்கிளார்க்கு லஞ்சம் கொடுத்து 5 நாள் ஓவர்டைமை 15 நாட்களாக மாற்றி, சுளையாக 1500 ரூபாய் ஆபீசில் ஏமாற்றி வாங்கி வந்தது என்ன ஆச்சு? யோசிக்கத் தொடங்கிறான் ராம்!

எல்லாம் தகுதிக்கு மிஞ்சிய ஆசையினால் வந்த வினை.

## தமிழ் பெண்

எனக்கு
முகம் இல்லை
இதயம் இல்லை
ஆத்மாவும் இல்லை

அவர்களின் பார்வையில்
இரண்டு மார்புகள்
நீண்ட கூந்தல்
சிறிய இடை
பருத்த தொடை
இவைகளே உள்ளன

சமையல் செய்தல்
படுக்கை விரித்தல்
குழந்தை பெறுதல்
பணிந்து நடத்தல்
இவையே - எனது
கடமைகள்!

கற்பு பற்றியும்
கற்பு உடையவள்
பெய்யெனப் பெய்யும்
மழை பற்றியும்
கதைக்கும் அவர்கள்
எப்போதும் எனது
உடலையே நோக்குவார்

கணவன் தொடக்கம்
கடைக்காரன் வரைக்கும்
இதுவே வழக்கம்!

## பொருள் புரியும்

இளமையைக்
கடந்த பின்
வயதின் பொருள் புரியும்!

வறுமையைக்
கடந்தபின்
வாழ்க்கையின் பொருள் புரியும் !

உழைத்துப் பார்
உயர்வின் பொருள் புரியும் !

தனித்து
நிற்கும் போது
உறவின் பொருள் புரியும்!

காதலித்துப்பார்
புயல் கூடத்
தென்றலாகத் தெரியும் !

## மயக்கம்

அன்பே என்றேன்
அலட்டிக் கொண்டாள்

அமுதே என்றேன்
அலட்சியம் செய்தாள்

கண்ணே என்றேன்
கண்டு கொள்ளவில்லை

நிலவே என்றேன்
நிற்காமல் போனாள்

மணிபர்சை திறந்தேன்
மயங்கி விட்டாள்

## காதலித்தேன்

வெண்ணிலவைக் காதலித்தேன்
விழி நிறையைக் கவி பெற்றேன்!

கதிரவனைக் காதலித்தேன்
கடமையினை கற்று விட்டேன்!

மேகங்களைக் காதலித்தேன்
தாகங்களை விட்டு விட்டேன்!

பறவைகளைக் காதலித்தேன்
உறவுகளைக் கற்றுவிட்டேன்!

தென்றலைக் காதலித்தேன்
திசைதோறும் சுகம் பெற்றேன்!

பூக்களைக் காதலித்தேன்
பாக்கள் நூறு கோர்த்து விட்டேன்!

கருங்குயிலைக் காதலித்தேன்
கானம் பாடக் கற்றுக் கொண்டேன்!

செந்தமிழைக் காதலித்தேன்
சிந்தனையில் வளமை பெற்றேன்!

பெண்ணவளைக் காதலித்தேன்
என்னையே இழந்து விட்டேன்!

## திருமதி திலகவதி தர்மராசா அவர்களின் பூதவுடல் அக்கினியோடு சங்கமம் ஆவதற்குச் சற்று முன்னர் முன்னாள் உதவி அரசாங்க அதிபரும் பிரசித்த நொத்தாரிசுமாகிய சண்முகம் இராமலிங்கம் அவர்கள் மயானத்தில் ஆற்றிய இரங்கலுரை.

அன்பர்களே!

எல்லோருடைய மதிப்புக்கும் அன்புக்கும் பாத்திரமாயிருந்து எம்மையெல்லாம் ஆறாத் துயரில் விட்டு சிவபதமெய்திய திருமதி திலகவதி தர்மராசாவின் இறுதி யாத்திரையானது அன்னாரின் பூதவுடல் அக்கினியோடு சங்கமமாகும் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. இவ்வேளையில் அக்குடும்பத்துடன் நெருங்கிப் பழகியவர்களுள் நானும் ஒருவன் என்ற கோதாவில், திலகவதி அம்மையாருடைய உயர்ந்த குணங்களையும், நல்லியல்புகளையும் இச்சந்தர்ப்பத்திலே நினைவு கூருதல் பொருத்தமானதென எண்ணுகின்றேன். திலகவதி அம்மையாரைப் பற்றி முழுமையாக அறிந்திராதோர் இருப்பின் அவர்களுக்கும் இது பயன்படுமென்பது எனது கருத்தாகும்.

யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த சைவ வேளாண்குலத் திலகர் முன்னாள் மலாயன் பென்சனியர் ஸ்ரீமான் சிவசாமி கனகசபை ஆறுமுகம் - சற்குணம் தம்பதியினரின் கனிஷ்ட புதல்வியாகிய திருமதி திலகவதி அவர்கள் திரு. க.மு. தர்மராசா அவர்களின் பாசமிகு துணைவியாராவார். மக்கட் பேறு இல்லையென்ற ஆதங்கம் இவர்களிடம் காணப்படவில்லை. காரணம் இள வயதிலேயே தாயாரை இழந்துவிட்ட இவரது ஒரு சகோதரியின் பிள்ளைகள் மீது அவர் காட்டிய அதீத அன்பும் பாசமுமேயாகும்.

குறித்த பெறா மக்கள் ஐவர் மீதும் இவர் காட்டிய கரிசனை, அன்பு, வழிகாட்டல் காரணமாக அவர்கள் அனைவரும் இன்று உலகம் போற்றும் உயர் நிலையில் வாழ்கின்றனர். பூபதி - தம்பியப்பா தேவராசா தம்பதியினர் ஈன்ற இப்பிள்ளைகள், பெற்றோருக்குச் சேர்த்த புகழுக்கு மேலான புகழையும், பூரிப்பையும் திருமதி திலகவதிக்கும் கணவர் தர்மராசாவுக்கும் பெற்றுத்தந்துள்ளனர். இவர்கள் பேராசிரியர்கள், வைத்திய கலாநிதிகள், கலாநிதிகள் ஆகிய கல்விமான்களாக மேல்நாட்டு பல்கலைக்கழகங்களிலும் பிரபல்யம் மிக்க நிறுவனங்களிலும் சேவையாற்றுகின்றனர். திலகவதி அம்மையாரை "ஆசையம்மா" என்று அன்பு தழுவ அழைக்கும் இப்பெறா மக்கள் ஆசையம்மாவால் உயர்ந்தோம் என்ற உணர்வோடு அன்பு செலுத்துகின்றார்கள். பெற்ற பிள்ளைகளை விஞ்சிய அளவில் இருக்கிறது இப்பெறா மக்களின் பாசம்! இதற்கெல்லாம் அத்திவாரமாயிருப்பது திலகவதி அம்மையாரின் அன்பும், பாசமும், கரிசனையும், கண்டிப்பான ஊக்குவிப்புமே.

நோய்வாய்ப்பட்டிருந்த காலப்பகுதியில் இப்பிள்ளைகளும், அவர்களுடைய உயர் பதவிகளிலுள்ள கணவன்மாரும், பிள்ளைகளும் அடிக்கடி இலங்கை வந்து ஆவன செய்தனர். ஒரு மகள் அமெரிக்காவில் பார்த்து வந்த வைத்தியத் தொழிலை "ஆசையம்மா"வுக்காக தற்காலிகமாக கொழும்பு அப்பலோவில் சேர்ந்து ஆற்றி வந்தார். "திருமணமாகி 15 ஆண்டுகளுக்கும் அதிகமாகப் பழகியும் கூட அத்தை என்னோடு மொத்தத்தில் 15 வாக்கியங்கள் வரையில்தான் நேரடியாகக் கூறியிருப்பா" என்றார் திலகவதி

அம்மையாரின் மருமகன்மாருள் ஒருவர். காரணம் அத்தனை மரியாதையாம். மீன் தனது குஞ்சுகளை அன்புடன் பாதுகாப்பாக வழி நடத்தி பின்னே காவலாய் செல்லுமாம். அந்தத் தன்மையைப் போல், மதுரை மீனாட்சியாகவே தன் பிள்ளைகளைப் பேணி வந்தார் என்றால் மிகையாகாது.

காரைநகரிலே உயர் வேளாண்மரபில் வந்த திரு க.மு.தர்மராசா அவர்கள் ஒரு பிரசித்த நொத்தாரிசும் சமாதான நீதவானுமாவர். அன்பால் இணைந்த அமைதிக் குடும்பமது. பல்கலைக்கழகத்துச் சட்டபீடத்திலும் சட்டக்கல்லூரியிலும் பல்லாண்டு கற்றுத் தேர்ந்தாலும், பெறுதற்கரிய அளவுக்கு சிவில் சட்ட நுணுக்கங்களை ஆய்ந்து தெளிந்தவர் திரு தர்மராசா அவர்கள். நீதிமன்ற நடைமுறைகள் சட்டத்தில் சில்லிகளை துல்லியமாக அறிந்தவர். தனது இறுதி நேரக் கருத்துக்களை பல மூத்த சட்ட அறிஞர்கள் பாராட்டுதல்களுடன் ஏற்று பிராதுகளிலும் மனுக்களிலும் சேர்த்துக் கொண்ட சந்தர்ப்பங்கள் பல. அச்சாணி போன்ற முக்கிய சட்ட அம்சங்களை மூத்த சட்ட அறிஞர்களின் உதவி கருதி சொல்லி விட வேண்டும் என்ற தீவிர ஆர்வத்தின் காரணமாக அவசர அவசரமாக கூறிவிடும் சுபாவம் அவரிடமிருப்பதால் "பொறும் தர்மராசா பொறும்" என்று மதிப்புக்குரிய மூத்த சட்டவறிஞர் திருவாளர் R.E.தம்பிரத்தினம் அவர்கள் அடிக்கடி கூறுவதை நானறிவேன்.

திரு. தர்மராசா அவர்கள் இந்த நிலைக்கு தானாக உயரவில்லை என்றே நான் நினைக்கிறேன். இவரை ஒரு சக்தியே உயர்த்தியது. அது வேறு யாருமல்ல - எமக்கு முன் தனது பூதவுடலை விட்டுச் சென்றுள்ள திலகவதி அம்மையாரே ஆவார். அவர் ஒரு பாரிய ஊக்குவிப்பாளர். அந்தப் பெருமை அவருக்கே உரியது.

அமரராகிவிட்ட திருமதி திலகவதி தர்மராசா அவர்கள் ஒரு சிறந்த இல்லத்தரசி. எல்லோரையும் வரவேற்பதிலும் உபசரிப்பதிலும் விருந்தோம்பலிலும் முதனிலை வகித்தார். பல விதமான பட்சணங்களையும் மிக நேர்த்தியாக சமைக்கும் திறம் கொண்டவர். "ஆன்ரி லண்டன் வந்ததும் எனது உடல் எடை ஏறத் தொடங்கிவிடும். அவ இலங்கை திரும்பி சிலகாலம் சென்ற பின்புதான் அந்த அதிகரிப்பு முன்னைய நிலைக்கு இறங்கும்" - இதைச் சொன்னவர் மருகர் சோதிநாதன். பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மீது அதீத பாசம் காட்டியவர் திருமதி திலகவதி தர்மராசா. இங்கே இப்போது நிற்கும் ஒரு பேரன் வினோஜ் இலங்கைக்கு வந்து திரும்பிய வேளையெல்லாம், "Grandma we are missing you a lot" என்று ஓயாது தொலைபேசியில் கூறுவார்.

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு" (நெருநல் - நேற்று), மற்றும் "நேற்றிருந்தாளன்னை இன்று வெந்து தணலானாள்" போன்ற ஆன்றோர் வாக்குகளின் பிரகாரம் யாவும் நிலையற்றவை என்பதை உணர்ந்து, இழப்பைச் சகித்துக் கொள்ளக்கூடிய மனோபலத்தை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும் என்பதே துயரடைந்திருக்கும் கணவனுக்கும், பெறா மக்கள் மற்றும் உறவினர் நண்பர்கட்கும் நாம் கூறும் ஆறுதலாகும்.

(குடும்பத்தினரின் சார்பில் நன்றியுரையும் வழங்கப்பட்டது)

மறைந்த திருமதி திலகவதியினுடைய ஆன்மா இறைவன் திருவடியில் நிலையான வீடுபேறு அடைய வேண்டிப் பிரார்த்திப்போமாக.

**நன்றி ! வணக்கம் ! !**

# நிறைந்த குடும்பத் தலைவி

கடந்த சில வாரங்களாக நோய்வாய்ப்பட்டு, உயிர் நீத்த திருமதி திலகவதி தர்மராஜா (அக்கா) அவர்கள், ஒரு சிறந்த மனைவியாகவும், உற்றார் உறவினருக்கு ஒரு உற்ற துணையாகவும், அவருடைய சகோதரர்களின் பிள்ளைகளுக்கு ஒரு சிறந்த தாயாகவும் திகழ்ந்தார்.

அவர் கடவுள் பக்தி மிக்கவர். தனது வீட்டில் ஒவ்வொரு நாளும் இறை வணக்கம் செய்து, பூசை செய்து, சமய முறைப்படி ஒரு தூய்மையான வாழ்க்கை வாழ்ந்தவர். இந்து சமய முறைப்படி எல்லா விரதங்களையும் முறைப்படி பிடித்து, விதிமுறைப்படி தானும் வாழ்ந்து, தனது கணவரையும், தனது உற்றார் உறவினர்களையும் அவ்வாறு நடக்க ஒரு உதாரணமாக வாழ்ந்து காட்டினார்.

அவர் எமது உறவினராகவும், அவருடைய கணவர், எங்கள் குடும்பத்துடன் மூன்று பரம்பரையாக உற்ற நெருங்கிய விசுவாசியாகவும், அன்பராகவும், நண்பராகவும் இருந்ததால், எங்கள் இரு குடும்பங்களும் மிகவும் நெருங்கிப் பழகக் கூடிய சந்தர்ப்பம் அமைந்தது. அவர் தனது கணவரைக் கண்ணும் கருத்துமாகப் பராமரித்து, அன்பாகப் பழகி, கணவரின் உணவு, உடை, சாப்பாடு, மருந்து போன்றவற்றில் தனிப்பட்ட கவனம் செலுத்தி வந்த ஒரு சிறந்த மனைவியாக விளங்கினார். அது போலவே, அவரது கணவரும் தனது மனைவியிடம் ஆழ்ந்த அன்பும், பாசமும் மிக்கவராகத் திகழ்ந்தார். அவர்கள் முற்பிறப்பில் செய்த புண்ணியத்தினால், இப்பிறப்பில் கணவன் மனைவியாக இணைவதற்கு இறைவன் ஆசீர்வாதமளித்துள்ளார். பிள்ளைகள் இல்லை என்ற ஒரே ஒரு குறைதான் அவர்களுக்கு இருந்தது.

ஆனாலும், அக்குறையை நிறைவு செய்ய அவருக்கு பெறாமக்கள் பலர் இருக்கின்றார்கள். திலகவதி அக்கா எப்படித் தனது சகோதரர்களின் மீதும், அவர்களின் பிள்ளைகளின் மீதும் பாசம் வைத்திருந்தாரோ, அவர்களும், அவரின் மீதும், அவர் கணவர் மீதும் மிக்க பாசமுள்ளவர்களாகத் திகழ்ந்தனர். இதனை அக்கா அவர்கள் நோய்வாய்ப்பட்ட நாட்களில் இருந்து, இறக்கும் வரை, அவர்கள் எல்லோரும் வெளிநாடுகளிலிருந்து, திரும்பத் திரும்ப, அடிக்கடி வந்து போனதிலிருந்தும், அவரைப் பராமரித்த விதத்திலிருந்தும், அவர் இறந்த போது கதறியழுத விதத்திலிருந்தும் உணரக்கூடியதாக இருந்தது. இக்காலத்தில், சில பிள்ளைகள் பெற்ற தாய் தந்தையரையே உதாசீனப்படுத்தி, அப்பெற்றோர் கண்ணீர் விட்டுக் கவலைப்பட்டு, இவ்வுலகை நீப்பதைப் பல இடங்களில் காண்கின்றோம். இங்கு அக்கா அவர்கள் உற்றார் உறவினர் பெருமளவில் சுற்றிச் சூழ இருக்கப் பிரியாவிடை பெற்றது ஒரு சிறப்பான அம்சமாகும்.

திலகவதி அக்காவிடம் இருந்த இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால், அவர் தனது உறவினர்கள், சிநேகிதர்கள் எல்லோரையும் அன்போடு வரவேற்று, உபசரிப்பார். அடிக்கடி எல்லோரையும் தனது வீட்டுக்கு அழைத்து, சிறப்பான உணவு வகைகளைத் தயாரித்து உபசரிப்பதில் முன் நிற்பார்.

அவர் எப்போதும் அழகாக உடையணிந்து, நகை அணிந்து, சிரித்த முகத்துடன் காணப்படுவார். அவர் கணவரும் அவர் ஆசைப்பட்ட பொருட்களை வாங்கிக் கொடுத்து, அவரின் வாழ்நாளில் அவரை மனம் கோணாமல் சிறப்பாகப் பராமரித்தார். ஆங்கிலத்தில் "Marriages are made in heaven" என்று ஒரு பழமொழி உண்டு. திரு. திருமதி தர்மராஜாவின் திருமணம் நிச்சயமாக மோட்சத்தில் இறைவனால் நியமிக்கப்பட்டது.

கடைசியாக, நான் ஒரு சில நாட்களுக்கு முன்னர், அக்காவின் ஒரு அம்சத்தைப் பற்றி அறியச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் கவிதை, கட்டுரை, சிறுகதைகள் எழுதும் எழுத்தாளர் என்பது தான் அது. இத்தனை காலமும் இந்த விஷயம் எனக்குத் தெரிந்திருக்கவில்லை. பலவிதமான அறிவுரைகளையும், வாழ்க்கைத் தத்துவங்களையும் அவை உள்ளடக்கியுள்ளதைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டேன்.

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் அவர் ஒரு நிறைகுடமாகத் திகழ்ந்தார். இவ்வளவு நற்பண்புகளையும், கெட்டித்தனத்தையும் தம்முள் உள்ளடக்கி இருந்தும், அவர் அகங்காரம், பெருமை அற்றவராக இருந்தார். உலகுக்கு ஒரு உதாரணமாகத் திகழ்ந்தார். அவரை இந்த இளம்வயதில் நாம் இழக்க வேண்டி வந்தது ஆழ்ந்த துயரத்தை அளிக்கின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக அவருடைய கணவரின் இழப்புக்கு அவருக்கு எப்படி ஆறுதல் கூறுவதென்றே தெரியவில்லை. எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு உற்ற துணையாக இருந்து அவரை வழிநடத்த வேண்டும் என நானும் எனது பிள்ளைகளும் பிரார்த்திக்கின்றோம். திலகா அக்காவின் ஆத்மா சாந்தியடைய நாம் மனதார ஆண்டவனை வேண்டி நிற்கின்றோம்.

***வைத்திய கலாநிதி திருமதி குமார் பொன்னம்பலம்***

# என் ஆசை அம்மாவிற்கு

என் ஆசை அம்மாவுக்கு நான் நினைவுக் கட்டுரை எழுதுவேனென கனவில் கூட நினைக்கவில்லை. விதி சதி செய்துவிட்டது. எத்தனை துன்பங்கள், எத்தனை துயரங்கள் என் ஆசை அம்மாவின் இழப்பினால் எங்களது குடும்பம் அனுபவித்து வருகின்றது. முதலில் எனது அம்மாவை பறித்தான். இப்போ எங்களுக்கெல்லாம் தாயென இருந்த எனது ஆசை அம்மாவை தன்னுடன் எடுத்துவிட்டான். எவ்வளவு முறை ஆண்டவனிடம் ஆசை அம்மாவின் உயிரைக் காப்பாற்றுவதற்காக பிரார்த்தனைகள், மன்றாடல்கள் செய்திருப்பேன். எங்களது மன்றாடல்கள் ஆண்டவனின் செவியில் கேட்கவில்லை போலும். அதனால்தான் எமக்கெல்லாம் ஒரு ஜோதியாக விளங்கிய எமது குலவிளக்கினை அணைத்து விட்டான். ஒருவர் இருக்கும் போது அவரது அருமை தெரியாது. அவர் இல்லாத போதுதான் அவரது அருமை தெரியுமென சிலரது கருத்து. ஆனால் எங்கள் ஆசை அம்மாவை பொறுத்தவரை, அவர் இருக்கும் போது அவரது சேவை எமக்கு மாத்திரமல்ல எமது உறவினர்கள், நண்பர்கள் எல்லோருக்கும் தேவையாக இருந்தது. அவர் இப்போ இவ்வுலகில் இல்லாதபோது அவரது இழப்பு எம்மை மட்டுமல்ல அவரது உறவினர்கள், நண்பர்கள் எல்லோரையும் மிகவும் பாதித்துள்ளது. எங்களது அம்மாவின் கடைசி சகோதரி ஆசை அம்மா. அப்பா அம்மாவின் செல்லப்பிள்ளை. அம்மா என்ற சொல் புனிதமானது, தெய்வத்திற்கு ஒப்பானது. அச்சொல்லிற்கு முன் ஆசை என்றும் காணப்பட்டால் அதன் பெருமையே தனி. எங்கள் எல்லோருக்கும் ஆசையான எங்கள் அம்மாதான் ஆசை அம்மா. நாம் ஏன் ஆசை அம்மா என்று அழைத்தோம் என்பது இப்போதுதான் புரிகின்றது. எங்கள் ஆசை அம்மா எங்கள் மீது வைத்த பாசம், அன்பு அதன்பெறாகத்தான் நாம் ஆசை அம்மா என்று அழைத்திருக்கின்றோம். நான் சிறுவயதிலேயே எனது தந்தையை இழந்துவிட்டேன். அம்மாவையும் எங்களையும் பொறுப்பேற்றது எங்களது அம்மாவின் அப்பா "அப்பப்பாவும்" ஆசை அம்மாவும் தான்.

ஆசை அம்மா மிகவும் இளம்வயதிலேயே எங்களை பொறுப்பேற்றார். ஆசை அம்மா மிகவும் பொறுப்புணர்ச்சியுடையவர். கடமை, கண்ணியம் தவறாதவர். மிகவும் சுறுசுறுப்பானவர். ஒருநாளும் வேலையற்று சோம்பேறியாக படுத்து இருப்பதை நான் பார்த்ததேயில்லை. அதிகாலையில் எழுந்துவிடுவார். எழும்பிய நேரத்திலிருந்து மிகவும் சுறுசுறுப்பாக எல்லா வேலைகளையும் கவனித்து, வீட்டை நிர்வகிப்பதில் ஆசை அம்மாவுக்கு நிகர் யாருமேயில்லை. அவர் எம்மை வயிற்றில் சுமந்து பெறவில்லையே தவிர எம்மை தமது சொந்தப் பிள்ளைகளாக நேசித்து வளர்த்து ஆளாக்கிய பெருமை என் ஆசை அம்மாவையே சேரும். எனது தங்கை ஜனனியில் மிகவும் ஆழ்ந்த அன்பு கொண்டவர். எனது அப்பா உயிருடன் இருக்கும் போதே, ஆசை அம்மாவின் இளமை பருவத்தில், அவர் கல்யாணம் செய்வதற்கு முன் எனது தங்கை ஜனனியை தான் தத்து எடுத்துக் கொள்ளப் போவதாக எனது தந்தையிடம் கேட்டுள்ளார். எனது அப்பா

உயிருடன் இருக்கும் போது மறுத்துவிட்டார். எனது அப்பா இறந்த பின், என் தங்கை ஜனனியை ஆசை அம்மா வளர்த்து, டாக்டருக்கு படிக்க வைத்து, இப்போ மிகவும் பெரிய ஒரு டாக்டராக (Radiologist Consultant) அமெரிக்காவில் விளங்கவைத்தார். ஒரு தாய் கூட தனது வயிற்றில் சுமந்து பெற்ற பிள்ளைகளிடம் கூட இவ்வளவு பாசம் வைக்கமாட்டார்கள். ஆசை அம்மா பாசத்தின் படைப்பு. ஆசை அம்மா அவரது அப்பா அம்மாவை பராமரித்த மாதிரி இவ்வுலகில் எந்தப் பிள்ளைகளும் பெற்றோர்களை பராமரிக்கமாட்டார்கள். ஆசை அம்மாவின் இரத்தத்தில் தியாக உணர்வு கலந்துள்ளது. எங்களுக்கு மட்டுமல்ல, உறவினர்கள், நண்பர்கள் யார் வந்து என்ன உதவி கேட்டாலும் இல்லை என்று கூறாமல், கர்ணன் மாதிரி உதவி செய்வதில் என் ஆசை அம்மாவுக்கு நிகர் யாருமில்லை. எனது மூத்த சகோதரி நளாயினி ஆசை அம்மாவுக்கு பெற்ற பிள்ளையிலும் பார்க்க கூடுதலான பாசத்தினை காட்டியவர். அவரது கணவன் சோதிநாதன் பெற்ற மகன் போல் ஆசை அம்மாவில் அன்பு செலுத்தி எனது அக்காவிற்கு ஒரு உறுதுணையாக இருந்தவர். என் அக்காவின் பிள்ளைகளான வாகிஷ், வினோஜ் தங்களது அம்மம்மா ஆசை அம்மா தான் என்பது போல் பாசத்தை அள்ளிப் பொழிந்தார்கள்.

எங்களது ஆசை அம்மா மிகவும் புண்ணியம் செய்த ஆத்மா. ஏனெனில் அவர்கள் இவ்வுலகில் வாழும்போதும் மிகவும் சீரும் சிறப்புமாக வாழ்ந்தார்கள். பல தான தருமங்கள் செய்தார்கள். வீட்டில் மகாலக்ஷ்மி அம்மனை ஆதரித்து பூஜைகள் செய்தார்கள். வரலக்ஷ்மி நோன்பு பூண்டு பல சுமங்கலிகளுக்கு ஆசீர்வாதம் அளித்தார்கள். அதனால்தான் என்னவோ அவர்கள் சுமங்கலியாக மறைந்துவிட்டார்கள். பிறப்பும், இறப்பும் மனித வாழ்க்கையில் சாதாரணமாக வந்துபோகும் நிகழ்வுகள். எமது வாழ்க்கையில் ஒருவர் பிறக்கும் போது அப்பிறப்பினை எண்ணி மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். அதேநேரத்தில் எமது வாழ்க்கையில் ஒரு இறப்பு நிகழும் போது அதன் உண்மை புரிந்தும் அதன் துயரத்தில் நாம் ஆழ்ந்துவிடுகின்றோம். பிறக்கும் ஒவ்வொருவரும் இறக்கத்தான் போகிறார்கள் என்ற உண்மை நிலை எமக்கு புரிந்தும் இறப்பு நிலையை எண்ணி அழுகின்றோம். அந்த தயரநிலையிலிருந்து எழுவதற்கு மிகவும் கஷ்டப்படுகின்றோம். ஆத்மா அழியாதது, நித்தியமானது. அதற்கு பிறப்பும் இறப்புமில்லை. எமது கர்மாவை, அதாவது எமது நல்வினை தீவினையை பொறுத்து பிறப்பு எடுக்கின்றோம். எமது பாவவினைகள் எப்போது முடிகின்றதோ அப்போ எமது ஆத்மா முத்தியடைகின்றது. அதாவது பேரானந்தமாகிய பரமாத்மாவை சென்றடைந்து முத்தி நிலையை பெறுகின்றது. இந்த உண்மை நிலையை தெரிந்த மானிடராகிய நாம், ஒருவர் இறக்கும் போது அதன் துயர நிலையிலிருந்து மீளமுடியாது நாமும் மாள்கின்றோம். என்னைப் பொறுத்தவரையில் ஆசை அம்மா இவ்வுலகில் சொற்பகாலங்கள் வாழ்ந்தாலும், எல்லோருக்கும் புண்ணியங்கள், தானதருமங்கள் செய்துள்ளார்கள். அவர்கள் வீட்டில் வைத்து வணங்கிய மகாலக்ஷ்மி அம்மன் மிகவும் சக்தி வாய்ந்த அம்மன். அந்த அம்மனை காலையும் மாலையும் பூஜை செய்து வணங்கிய ஆசை அம்மா, நிச்சயமாக ஆண்டவன் சந்நிதியில் சரணடைந்து முத்தி நிலையை

அடைந்திருப்பார்கள். ஆசை அம்மா ஒரு நல்ல அம்மா மாத்திரமல்ல, நல்ல ஒரு குடும்பத் தலைவி. அத்துடன் நல்ல ஒரு மனைவி. ஆசை அம்மாவும் அவரது கணவர் Uncle உம் மிகவும் மனமொத்த தம்பதிகள். தாரமும் குருவும் தலைவிதிப்படி என்று எமது சான்றோர்கள் கூறுவார்கள். ஆனால் ஆசை அம்மாவும் Uncle உம் மிகவும் கொடுத்து வைத்தவர்கள், ஒருவரை ஒருவர் மனைவியாகவும் கணவனாகவும் பெற்றதற்கு.

ஆசை அம்மா செய்த புண்ணியம் Uncle அவருக்கு கணவனாகக் கிடைத்தமை. Uncle செய்த புண்ணியம் ஆசை அம்மா மனைவியாக வாய்த்தமை. இருவரும் மனமொத்து அன்னியோன்னியமாக வாழ்ந்தமை ஆண்டவனுக்கு பொறுக்கவில்லை போலும்! அதனால் தான் Uncle இடமிருந்து ஆசை அம்மாவை நிரந்தரமாக பிரித்து விட்டான். ஆசை அம்மா இவ்வுலகில் நிறைவான வாழ்க்கை வாழ்ந்து மறைந்து விட்டார்கள். அவர்களது உடம்புதான் மறைந்தது. அவர்களது ஆத்மா நிச்சயமாக எங்களுடன் இருந்து எங்களது எதிர்கால சுபீட்சத்திற்கு துணைபுரியும். எனக்கு எனது அம்மாவில் உயிர். அம்மா இறந்த போது நான் எப்படி இவ்வுலகில் வாழப் போகின்றேன் என நினைத்தேன். ஆனால் ஆசை அம்மா எங்களுடன் இருந்தபடியினால் எங்களுக்கு அம்மாவின் பேரிழப்பு மிகவும் பாதிப்பு தரவில்லை. நாம் ஆசை அம்மாவின் பெறாமக்களல்ல. அவர்களின் பிள்ளைகள். ஏனெனில் எங்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் மிகவும் அக்கறை செலுத்தி, எங்கள் நல்லது கெட்டதில் பங்கேற்று, எம்மை வழிநடத்தி வந்த தெய்வம். அவரது இழப்பு என்னை முற்றாக செயலிழக்க வைத்துவிட்டது. ஆனால் எனது ஆசை அம்மாவின் ஆத்மா என்னை இவ்வுலகில் கஷ்டம் அனுபவிக்க வைக்கமாட்டார்கள். என்னுடன் இருந்து என்னை வழிநடத்துவார்கள். காலம் துயரத்தினை ஆற்றும் என்று சான்றோர்கள் கூறுவார்கள். காலம் போகப் போக எமது துயரநிலை மறந்து நாம் சாதாரண நிலைக்கு வருவோம். ஆனால் ஆசை அம்மாவின் இழப்பு எம்மை சாதாரண நிலைக்கு எப்போ கொண்டு வரும். எம்மையெல்லாம் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தி மறைந்து போன எங்களது அன்புத் தெய்வம் ஆசை அம்மாவின் ஆத்மா ஆண்டவனுடன் இரண்டறகலந்து முத்தியடைய ஆண்டவனை பிரார்த்திக்கின்றேன். என் ஆசை அம்மாவை எப்போ, எங்கே, எப்பிறப்பில் இனி காண்பேன்?

*மகள் - சுகி (வசந்தி)*

*(டாக்டர் வசந்தி தேவராசா ஸ்ரீஸ்கந்தராசா)*

# திருமதி திலகவதி தர்மராசாவின் அதிவேக வாழ்க்கை

பலர் நூறாண்டுகள் வாழ்ந்தும் முற்றுப் பெறாத வாழ்க்கை. திலகவதி அம்மையாருடன் சில காலம் பழகிய சந்தர்ப்பத்தினால் எப்படி வாழ்ந்தார் என்பதை பின்நோக்கிச் சிந்தித்தேன்.

அவருடைய சிறந்த தெய்வ பக்திதான் வேகமான வாழ்க்கைக்கு வழிவகுத்ததா? இதற்குச் சமயத் தொண்டர்கள்தான் விளக்கம் அளிக்க வேண்டும். வீட்டினிலே அம்மன் சிலை வைத்துச் சமயாசார விதிகளுக்கு அமைய, சிறப்பாக வழிபட்டு வந்தார். அச்சிறப்பு வைபவங்களில் எனது பிள்ளைகளையும் பங்கெடுக்குமாறு வேண்டி, தான் பெறும் அருள் மற்றவர்களும் பெற்று வாழ வேண்டுமென வழி நடத்தினார். இன்றும் எனது பிள்ளைகள் ஆசையாக குரு அன்ரி என்றே பாசமாக அழைப்பார்கள். அன்ரி தங்களுக்கு விளக்குப் பூசை என்றால் என்ன என்பதைத் தெளியவைத்துச் சமயப் பற்றுதலுக்கு உரம் ஏற்றி வைத்த நிகழ்வுகளை நினைவுகூரத் தவறுவதில்லை. விசேட நாட்களில் தெய்வ ஸ்தான கோயில்களுக்கும், குடும்ப சமேதரராகச் சென்று வருவதில் தவறுவதில்லை. நான் அறிய ஓர் உத்தம தெய்வ பக்தி நிரம்பிய குடும்பப் பெண்ணாகவே திலவதி அம்மையார் விளங்கினார்.

நான் மதிப்பளிப்பவர்களில் உத்தமராகிய நண்பர் தர்மராசாவிற்கு வாழ்க்கைத் துணைவியாக இருந்து அவரது பற்பல முன்னேற்றங்கள், சிறப்பிற்கு பின்நின்று அயராது உழைத்தவர். ஒருவருக்கு எப்படியான மார்க்கத்தில் அணுகி அவருக்கு உகந்த கருத்துக்கள், புதினங்கள் கூறுவதில் கைதேர்ந்தவர். நான் சந்திக்கும் சமயங்களில் தனது கணவரின் சில அவசரச் செய்கைகள் பற்றி வர்ணிப்பதில் தன்னுடைய உவகைகளையும் என்னுடன் பகிர்ந்துகொள்வதில் தவறுவதில்லை. ஒவ்வோர் சந்திப்பிலும் புதுப்புது வேடிக்கையான செயல்களை மெருகூட்டிச் சொல்வார்.

திலவதி அம்மையார் தனது கணவரின் விசுவாசமான நண்பர் என்பதால், என்னையும் தனது நம்பிக்கைக்குரிய சிலரின் பட்டியலில் சேர்த்துக் கொண்டார். வீட்டினில் சிறப்புக் கொண்டாட்டங்கள் எது ஏற்படினும் என்னை அழைப்பதில் தவறுவதில்லை. என் மீது எவ்வளவு பாசம் வைத்திருந்தாரோ அதேவண்ணம் எனது குடும்பத்தினரையும் மதித்து, பற்றுப்பாசமாக இருந்தார்.

என்னுடைய மூத்த இரு பெண்பிள்ளைகளின் வாழ்விற்கு முன்னோடியாக நின்று நெறிப்படுத்தி, அவர்களின் அறியாமைகளை அகற்றி, இன்னல் ஏற்படும் காலங்களில் பக்கபலமாக நின்ற நாட்களை, என்பிள்ளைகளாலோ, என்னாலோ ஒரு பொழுதும் மறக்கவே முடியாது. குரு அன்ரியின் சுகவீனம் அறிந்து பிள்ளைகள் பதற்றம் அடைந்து, குரு அன்ரி காட்டிய இறைமார்க்கத்தில் அவரை காப்பாற்ற இறைவனை வேண்டினார்கள். பலன் அளிக்கவில்லை. இழப்பினை அறிந்து கதறினார்கள். இப்படி ஒரு சோதனையா என அங்கலாய்த்தார்கள்.

விருந்தோம்பலுக்கு அதிசிறந்த உத்தமியாக விளங்கினார். எனது பிள்ளைகள் வெளிநாட்டில் இருப்பதால் அவர்களைப் பார்க்கச் செல்லும் சமயங்களில், அறுசுவையாக நண்டு, இறால், கணவாய் ஆகியன, குரு அன்ரி சாப்பபிடாமலேயே அவர்களுக்காக எவ்வளவு சுவையாகச் சமைத்து, கெட்டுப் போகாமல், பயணத்துக்கு ஏற்ற பொதிகளாகவும் அமைத்து, இன்முகத்துடன் வழங்கிய நாட்களை நினைவுகூரவா? எத்தனையோ விருந்துகள், பெரிய கோட்டல்கள், விடுதிகள், வீட்டில் வழங்கிய விருந்துகளை நினைவுகூரவா? யாவும் எங்களைத் திருப்திப்படுத்தும் செயலில் தன்னிறைவு குதூகலம் அடைந்தார்.

குரு அன்ரியின் வாழ்க்கை அதி வேகமெனக் குறிப்பிடப் பல காரணங்கள் உண்டு. மார்க்கண்டேயர் 16 வயதினில் சகல கலைகளையும் கற்றுத் தெளிந்து பூரண ஆயுள் பெற்றார். திலகவதி அம்மையார் சொற்ப கால வாழ்வில் சந்திக்க வேண்டிய பல காரியங்களை அணுகி, பலரின் நன்மதிப்பு, பாசம் பெற்றுப் பெயரும் புகழுடன் சிவபதம் அடைந்தார்.

தனது சொற்ப கால வாழ்வில், கணவரின் அதி உன்னத பாசப் பிணைப்பிற்குக் கட்டுண்டார். கணவரின் சில செயல்கள் தன் விருப்பிற்கு அளவு மீறிச் செல்லும் சமயங்களிலும், மிகச் சாதுர்யமாக கையாண்டு, அவரையும் உறுத்தாது, நன்மை பயக்கும் மார்க்கத்திற்கு திருப்பிவிடுவதில் கை தேர்ந்தவர். தர்மராசாவின் செயலிற்கும், திறனிற்கும் மிக்க உறுதுணையாக, வழிகாட்டியாக அமைந்தார். தர்மராசாவின் வேகத்திற்கு வேற்று மாதர்களினால் தாக்குப் பிடிக்கலாம் என்பதோ கேள்விக்குறி? திகலவதி அம்மையார் தன் சகோதரி பிள்ளைகளில் அளவு கடந்த அன்பு, பாசம் வைத்திருந்தார். அவர் வைத்த பாச முதலீடு வீண் போகவில்லை. அவரது பிள்ளைகளாகவே வளர்ந்து, அதிசிறந்த கல்வித் தகைமைகளில் தேர்ச்சி பெற்று இறுதிவரை கடந்து வந்த பாதைகளிற்கு, மாசற்று இக்கால வரலாற்றில் அருமருந்தாகக் காணப்படும் உறவு என்பது இது தான் என்பதை, மற்றவர்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் ஆசை அம்மாவிற்குப் பணிவிடைகள் செய்தார்கள். ஆசை அம்மாவின் இழப்பு அவர்களுக்கு பாரிய தாக்கம். சிறிதளவேனும் பிசகாது அவாவின் இறுதிநாள் வரை ஆசை அம்மா எப்படி கவனிக்கப்பட்டார் என்பதில் திருப்தியடைந்து இழப்பின் தாக்கத்தை ஓரளவு தணித்துக் கொண்டார்கள். திலகவதி அம்மையாரின் Fast Living. இந்த சொற்பதம் எனது மூத்த சகோதரத்திடம் பொறுக்கியது. Live fast; Die young and leave a good looking corpse!

பற்றபல நாடுகள் சென்று, வேற்று நாடுகளின் கலை, கலாசாரம் அறிந்திருந்தும் நமது கலை, கலாசாரத்தை எப்படி பேணிக்காக்கப்பட வேண்டும் என்பதில் கூடிய கரிசனையாக இருந்தார். அவாவின் உடைய வேகமான வாழ்க்கைக்கு நாம் நூறு ஆண்டுகள் வாழ்ந்தாலும் ஈடு இணையற்ற சாதனையுடன் புகழுடம்பெய்தினார். அவாவின் ஆன்மா ஈடேற என் அன்பு இறைவணக்கம்.

***Dr. சு. மகேந்திரராசா***

# மக்கள் மனதில் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் அமரர் திலகவதி தர்மராசா

வாழ்க்கை என்னும் பயணத்தில் நாம் பலரைச் சந்திக்கின்றோம். ஆனால் சிலருடைய பண்பு, அன்பு, செயல் முறை என்பன எம்மை வெகுவாக ஈர்த்து விடுகின்றது. அப்படியான ஒருவர்தான் அமரர் திலகவதி தர்மராசா. விருந்தோம்பல் என்ற பதத்தின் இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர் அவர். எந்தச் சமயத்தில் வீட்டிற்குச் சென்றாலும், இன்முகத்துடன் வரவேற்று எமது பிரச்சினைகளைக் கேட்டு எந்த உதவிகளையும் நாங்கள் கேட்காமலே செய்யும் ஒரு கற்பகதருவாக வாழ்ந்து, மற்றவர்களுக்காக தனது வாழ்க்கையின் பெரும் பகுதியை அர்ப்பணித்தவர் என்பதற்கு இரு கருத்துக்கள் இருக்க முடியாது.

ஆண்டவனின் கிருபையால் அவரின் கணவர் திரு. தர்மராசாவும் அமரரின் தாராள மனத்திற்கு மிகவும் ஒத்தாசையாக இருந்தவர். ஆண்டவன் இருவரையும் எதுவித குறையும் இல்லாமல் வாழ்வாங்கு வாழவைத்து, மற்றவர்களின் குறைகளைத் தீர்க்கும் நிலையில் தனது அருளைப் பாலித்து வந்தார். திரு. தர்மராசா அவர்களின் செயற்பாட்டிற்கு திலகவதி அம்மையார் ஒரு உந்துசக்தியாக இருந்தார். அன்னார் இன்னும் நீண்ட காலம் வாழ்ந்து தனது பணிகளைத் தொடர்ந்திருக்கலாம். ஆண்டவன் நல்லவர்களை விரைவில் தன்பால் எடுத்துக் கொள்வார் என்ற வாக்கியத்தை உறுதி செய்வதற்காகத்தான் அமரரின் உயிரை விரைவில் எடுத்துக் கொண்டாரோ எனத் தோன்றுகின்றது.

ஒருவர் உயிர் வாழும்போது அவரது அருமையை நாம் உணர்வதில்லை. உலகில் பிறக்கும் அனைவருக்கும் வாழ்க்கையை பயன் உள்ளதாக வாழும் வாய்ப்புக் கிட்டுவதில்லை. ஆனால் அமரர் திலகவதி அம்மையார் எம்மை விட்டுப் பிரிந்தாலும் அவர் செய்த உதவிகள், நற்பணிகள் என்றும் எம்நெஞ்சத்தை விட்டகலாது. அவரை எம் இதயம் என்றும் உயிருடன் பார்த்துக்கொண்டேயிருக்கும். எனது குடும்பம் அன்னாருடன் கடந்த 21 வருட காலமாக பழகிவந்தோம். எமது குடும்பத்தின் ஒருவராகவே பார்க்கும் அளவிற்கு அவரது பண்பினால் எம்மை ஈர்த்துள்ளார். அவர் செய்த நன்மைகளின் பயனாக அன்னாரின் பெறாமக்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அவர் நோய்வாய்ப்பட்டிருந்த நேரத்தில் தங்களால் இயன்ற உதவிகளைப் புரிந்துள்ளனர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த அம்மையாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் திரு. தர்மராசா அவர்களுக்கும், பெறாமக்களுக்கும், உறவினர்களுக்கும் அவரின் பிரிவைத் தாங்கக்கூடிய உறுதியை வழங்க வேண்டுமெனவும் ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

சாந்தி சாந்தி சாந்தி

***பேராசிரியர் பவானியும் பாரியாரும்***

## அன்பின் மறுபெயர் பேபி அக்கா

எமது பேபி அக்கா மிகச் சிறந்த நற்பண்புகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்கிய ஒருவர். எனது சிறுபராயத்தில் எனது அம்மாவின் மூலமாகவே இவரின் சிறப்பை அறிந்து கொண்டேன். பின்னர் அவர் கொழும்பு வந்த பிறகே இவரை நேரில் சந்திக்க முடிந்தது.

பழகுவதற்கு மிகவும் இனிமையானவராகவும் எளிமையானவராகவும் திகழ்ந்தவர் பேபி அக்கா. தனது தந்தையாருக்கு மிகுந்த பாசத்துடன் பணிவிடைகள் பல செய்த பேபி அக்காவை எம்மால் ஒரு போதும் மறக்க முடியாது.

தான் சந்திக்கும் எல்லோரிடத்திலும் அன்பும் பரிவும் காட்டும் பேபி அக்காவைப் போல் இனி ஒருவரும் இருக்கமுடியாது என்றே கூறவேண்டும்.


தனது சகோதரியின் குழந்தைகளை மிகுந்த பாசத்தோடு வளர்த்து அவர்களை நல்வழியில் இட்டுச் சென்ற பெருமைக்குரியவர். பேபி அக்காவை அக்குழந்தைகள் "**ஆசையம்மா**" என அழைத்து தமது அன்பை வெளிப்படுத்துவது சிறந்த முன்னுதாரணமாகவே எம்மெல்லோருக்கும் தென்படுகிறது. தான் வளர்த்த குழந்தை களிடத்தில் மாத்திரமன்றி தனது உறவுகளைப் பேணுவதிலும் சிறந்து விளங்கியவர் பேபி அக்கா. இவர் கனடாவில் வசித்த போதும் சரி, இலங்கையில் வசித்த போதும் சரி, தனது சொந்த பந்தங்களை தேடிப்பிடித்து விருந்து வைப்பது பேபி அக்காவுடைய தனித்துவமான செயல். பேபி அக்காவின் விருந்திலே கலந்து கொண்டு நான் இதுவரை அறிந்திராத உறவுகள் பலரைக் கண்டு கொண்டேன். பேபி அக்கா கனடாவில் வாழ்ந்தபோது அங்குள்ள வானொலியில் சேவையாற்றியதுடன் தமிழ்ப் பத்திரிகைகளுக்குப் பல ஆக்கங்களையும் எழுதி புகழ் பெற்றவர் பேபி அக்கா.

சமையலில் சிறந்த தேர்ச்சி பெற்ற எமது பேபி அக்கா, தனது உடை அலங்காரத்திலும் மிகுந்த கவனம் செலுத்தி எப்போதும் கண்ணுக்கு இனிமையான தோற்றத்துடனேயே வலம் வருவார்.

எல்லோருக்கும் அன்பு பொழியும் ஒருவரை இழந்து நிற்பது மிக வேதனைக்குரிய ஒரு விடயம். பாசமுள்ள மனைவியின் இழப்பினால் துயரடைந்திருக்கும் அண்ணன் தர்மராஜாவுக்கு மனத் தைரியத்தை இறைவன் வழங்க வேண்டும். அத்துடன் அம்மனைப் பூசித்து வழிபட்ட எமது பேபி அக்காவுக்கு ஆன்ம ஈடேற்றம் கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி ! சாந்தி ! ! சாந்தி ! ! !

- ***ஆனந்தி பாலசிங்கம்*** -



சகோதரி உறவுடைய திருமதி. இளையதம்பி அவர்களின் பிள்ளைகளுடன்- லண்டன்






பெறாமகன் குகனேசபவான் குடும்பத்தாருடன் பெறாமகன் T.N. குருநாதன் உட்பட

கனடா

நோயுற்றிருந்த காலப்பகுதியில் திருமதி . திலகவதியாரின் விருப்பின் பேரில் உறவினர் அன்பர்களுடான ஒன்று கூடல்...............

கொழும்பு ஹில்டனில்











அக்கா பூபதியும் மற்றும் சகோதர உறவுடையோரும்



சகோதர உறவுடைய திரு. கனகசபாபதி அவர்களின் மைந்தனும், மருமகளும், பேரன




கொழும்பு சவ்வயார் HOTEL ல் இடம் பெற்ற பேரன் வாகிசின்
பிறந்தநாள் விழாவின் போது



வினோஜின் பிறந்தநாளில் கேக் ஊட்டல்




லண்டனில் உள்ள TAJ MAHAL மாதிரியின் முன்னால்




மைத்துனி CHRISTINE ன் லண்டன் இல்லத்தில்




HEATHROW விமான நிலையத்தில்



[illegible]டனில் இடம் பெற்ற தனது பிறந்த நாள் வைபவம்



அண்மையில் பேரப்பிள்ளைகள் சகிதம் கொழும்பு இல்லத்தில்



அண்மையில் திருமதி. சுந்தரலட்சுமி இல்லத்தில் - கொழும்பு



லண்டன் தோப் நந்தவனத்தில்



சகோதரி மேரி ஜோசப் மகள் பிரியாவின் திருமணத்தின் போது
~பெங்களூர்~



முதன்முதலாக HOTEL ல் இரகசியமாக ஏற்பாடு செய்யப்பட்ட கணவரின் பிறந்த தின கொண்டாட்டத்தில் (24.08.2004)



இல்லத்தில் மஹாலக்ஷ்மி விளக்கு பூசையில் (2004)



பெரியம்மா திருமதி. டாக்டர் குருசாமியுடன்



cousin திருமதி. கேணல் ராஜயோகத்துடன்



லண்டனில் DR. சோதிநாதன் குடும்பத்துடனும்,திருவும் உட்பட



பேரன் வினோஜின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ~லண்டன்~

# திருவாட்டி திலகவதி தர்மராசா

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் ஒன்றாகிவிட்டார். தர்மமே போற்றும் பண்பாளன் தர்மராசாவை நல் மணவாளனாகப் பெற்று இல்லறம் நல்லறமாக வாழ்ந்தகாலம் 58.

அன்னார் வாழ்ந்த காலங்களில் எல்லோாள் மனதையும் கவர்ந்த, நல் மதிப்பைப் பெற்ற ஒப்பற்ற ஓர் தெய்வப் பிறவி. கல்வி, செல்வம் சிறப்புகள், உற்றார் உறவினர், நண்பர்கள் என சூழ உள்ளவர்களுடன் வாழ்ந்த சீமாட்டி.

யான் அவர்களுடன் பழகிய நாட்கள் சிலவே. மலர்ந்த முகம், உதட்டில் புன்னகை, எந்நேரமும் பிறரையும் வாழ வைக்க வேண்டும் என்ற உயரிய நல்ல சிந்தனைகள். அவற்றால் நல்ல செயல்கள், அவற்றின் முடிவாக உள்ளம் பூரிப்பு.

எண்ணங்களை ஆதரித்துப் போகும் கணவருடன் இணைந்து செய்த அறப்பணிகள் பலப்பல. யார் யாருக்கு என்னென்ன காலம் இடமறிந்து செய்தார்கள் என்பதை பயனடைந்தோர் எண்ணி உள்ளம் உருகுகின்றனர். அன்னாரின் அறப்பணிகள் இவைதான் என்று ஒவ்வொன்றாக சொல்வதிலும் அடியேன் மனதில் ஆழமாகப் பதிந்து, "இப்படியும் ஒரு பிறவியா" என எண்ணி வியக்கும் ஒரு சம்பவம்.

மிக நெருங்கிய ஒருவர் வழியால் வருகிறார். தனி வழி வந்த பெண்ணின் கழுத்தில் மின்னிய தாலியைத் திருடர்கள் அபகரித்துப் போனதை அறிந்து பதறிப்போன அம்மையார் தன் கழுத்துத் தாலி நிலைக்க வேண்டுமென நினைந்து புதியதோர் தாலி செய்வித்து அப்பெண்ணின் கழுத்தில் தாலி மின்ன வைத்த புண்ணியவதி. எனக்கு எனக்கென்று வாழும் இக்காலத்தவர்கள் மத்தியில் இப்படியும் ஒரு பிறவியா?

தான் மட்டும் வாழாமல் தக்கோர் அனைவரையும்
வான் மட்டும் உயர்த்தி வாழவைத்த பண்புடையாள்
நான் என்று நினையாது நாம் என்று வாழ்ந்த பண்பினால்
யாவராலும் 'ஆசையம்மா', 'ஆசை அன்ரி' என அழைக்கப்படும் சிறப்புடையவர்.

"அன்பு நல்லறிவு ஞானம்
அநுபவம் அசையா நெஞ்சம்
இன்புரை எளிமை சாந்தம்
ஈகை நல்லுண்மை நேர்மை
புன்னகை பொலிவு பக்தி
புதுமை நல்லடக்கம் சேவை
என்பன பொலிந்த தோற்றம்
எங்கள் 'ஆசையன்ரி' என்பேன்"

## இறுதிக்காலம்

"பிறப்பு உண்டேல் இறப்பும் உண்டு"

"ஊழ்வினை மெல்ல நுழையும்"
"தருமம் பின் இரங்கி ஏங்க ஆசை அன்றி வைத்தியசாலைக்கு கால் வைக்க வேண்டியதாயிற்று"

"ஊழ்வினை உறுத்தாது கழியாது" என்ன விலை கொடுத்தும் தர்மபத்தினியின் உயிரை மீட்க பாடுபட்டும், அந்தப் புண்ணிய ஆத்மா பூவோடும், பொட்டோடும், பொன்னொடும் கால பயமின்றி, பதட்டமும் பிதற்றலும் இன்றி காலனைக் காலால் கடிந்தவன் கழலடியை நோக்கிச் சிட்டாகப் பறந்து விட்டது.

ஊர் நடுவேயுள்ள கிணறு யாவர்க்கும் பயன்படுவது போல் கணவன், இனபந்துக்கள், பாசத்தோடு வளர்ந்தவர்கள், அயலவர்கள், நண்பர்கள் யாவர்க்கும் பயனுடையராய் வாழ்ந்து பரமபதம் அடைந்த ஆசையம்மா, ஆசை அன்றி அனைவரது உள்ளங்களிலும் என்றும் அழியா இடம் பெற்றுவிட்டா.

உடல் அநித்தியம், ஆன்மா நித்தியம் என்பதை கருத்தில் வைப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

***செல்வி. பா. வேலுப்பிள்ளை,***
*இளைப்பாறிய ஆசிரியர்.*

# KIND LITTLE HEART

On December nineth Bloom a flower
which was precious than golden shower

She has a kind little heart
which no one likes to de part

(The) At times we had fun (the) some times we had joy
can be remembered and can't be destroyed

She gave us good memories through dinners and parties
with friends and relatives neighbours and families.

When in need she gives a helping hand
which is of a value than a piece of land

God has chosen her to sparkle in the air
As we will remember her as a shining star.

***Bhairavi Rajkumar***

## அன்புள்ள பேபி அம்மாவுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலி....

சிறு வயது முதல் என்னிடம் அன்பும் பாசமும் பொழிந்த சின்னம்மாவே,
எங்கள் அம்மாவின் குடும்பத்தில், நாங்கள் அறிந்த ஒரே சொந்தமே,
எப்பொழுதும் சந்தோஷமும் சிரிப்பும் நிறைந்தவரே,
என்னுடைய சோகத்தில் உறுதுணையாய் நின்றவரே,
என் கல்யாணத்தை முன்னின்று நடத்திய தாயே,
விருந்தோம்பல் என்ற வார்த்தைக்கு இலக்கணமே,
உங்கள் வீட்டுக்கு வருபவர்களை எல்லாம் ஆசையோடு உபசரித்தவரே,
எப்பொழுதும் மகாலட்சுமியாய் காட்சி அளித்தவரே,
நோயுற்ற போதும் என் குழந்தைகளை அன்பும் பாசமும் நிறைந்து கொஞ்சியவரே,
உலகின் வெவ்வேறு மூலைகளில் இருந்த உறவினர்களை ஒன்றுசேர்த்தவரே,
நீங்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும்
எங்கள் வீட்டு தேவதையாக, எங்கள்
நெஞ்சங்களில் வாழ்ந்துகொண்டே இருப்பீர்.

***பிரியா ஜெயக்குமார்***
*பேறாமகள்*
*பெங்களூர் - அமெரிக்கா.*

## An Appreciation of Aunty Baby

The Sudden and untimely demise of Baby Aunty came as a shock not only to us, also to her relatives and friends. The loving memories of her will always remain in my heart. She was more of a friend than a relative to our family during the two decades we knew her.

They say "BEHIND EVERY GREAT MAN THERE IS A GREAT WOMAN" and here it was Aunty Baby behind Uncle Tharmarajah's achievements and success in life. She was the main source of encouragement and support and also a companion and guide to him.

Her husband will not only feel her loss, also by all of us including friends and relatives for the sacrifices and dedicated service she did to all. Her untimely death was a shock to us and her beloved husband Uncle Tharmarajah.

My mother, my in-laws and my wife join me in paying tribute to late Mrs.Thilakavathy Tharmarajah (Baby Aunty).

May her soul rest in peace.

***Gajendra (Gaja)***

# நெஞ்சம் மறப்பதில்லை

திருமதி திலகவதி தர்மராஜா அவர்கள் இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தியைக் கேட்டதும் அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரமும் அடைந்தேன். அன்பு, சாந்தம், பொறுமை என்னும் அரிய நற்பண்புகளுக்கு இருப்பிடமாய், விருந்தோம்பும் பண்பிலே சிகரமாய் விளங்கியவர், இவ்வுலகில் இல்லை என்பதை நம்ப எமது நெஞ்சம் மறுக்கின்றது.

'பேபி' எனச் செல்லமாக யாவராலும் அன்புடன் அழைக்கப்பட்டவர். பெயருக்கேற்ற வகையில் குழந்தை உள்ளம் படைத்தவர். இரண்டு மாதங்களுக்கு முன்பு நான் எனது புத்திரனுடன் கொழும்பு சென்றிருந்த போது இவர்களைச் சந்திப்பதற்காக அவரது இருப்பிடத்திற்குச் சென்றிருந்தேன். எம்மை அன்புடன் வரவேற்று இனிமையாக உரையாடி மகிழ்ந்தார். பிறரை உபசரிக்கும் பண்பு இவருக்கு இயற்கையாக அமைந்தது எனலாம்.

'பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு

அணியல்ல மற்றுப் பிற'

என்ற பொய்யா மொழிப் புலவர் வள்ளுவரின் வாக்கிற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் என்றால் அது மிகையாகாது. எவருக்கும் தயங்காது உதவி செய்யும் மனப்பாங்கு உடையவர். என்னுடன் உரையாடும்போது தான் சிறிது சுகயீனமுற்றிருப்பதாகவும் அதற்குரிய சிகிச்சை தற்போது பெற்று வருவதாகவும், நல்ல குணமடைந்தவுடன் அவுஸ்திரேலியாவிற்கு வந்து அனைவரையும் சந்திப்பதாகவும் கூறியிருந்தார். இவ்வாறு எம்முடன் அன்புடன் பழகியவர் காலமாகிவிட்டார் என்று எண்ணும்போது ஆற்றொணாத் துயரம் ஏற்படுகின்றது. இவரது மறைவு இவரது குடும்பத்தினருக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். பிறர் துயர் துடைத்த திலகவதி இன்று தமது அருமைக் கணவர், தமது சகோதரிகளின் பிள்ளைகள், உறவினர், நண்பர்கள் எல்லோரையும் துயர்க்கடலில் ஆழ்த்தி இறைவன் விரும்பிய இன்மலர் என்ற காரணத்தினாலேயே மறைந்து விட்டார். சடுதியாக வாழ்வை நீத்த காரணம் ஒருவரும் அறியோம்.

இனியவரையே இறைவனும் விரும்பித் தம்மருகில் அழைப்பர். இவரது நினைவு எமது நெஞ்சத்தை விட்டு அகலாது. யாழ்ப்பாணத்தில் நாம் வாழ்ந்த போது உறவினர் அனைவரும் சேர்ந்து பாசமுடன் வாழ்ந்த வாழ்க்கையை நினைவு கூருகிறோம். இவரது பிரிவால் வாடும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அன்னாரின் ஆத்மசாந்திக்காக நாம் அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

***திருமதி. கனகாம்பிகை ஜெகநாதன்***

*சிட்னி, அவுஸ்திரேலியா.*

## அன்புள்ள பேபி அக்கா

உங்களது மறைவுச் செய்தி கேட்டதும் நாம் அதிர்ச்சியும் துயரமும் அடைந்தோம். அன்புடன் எம்முடன் பழகிய நெருங்கிய உறவினரை இழந்துவிட்டோம் என எண்ணிக் கலங்குகின்றோம். இனிமையாகப் பேசும் சுபாவமும் விருந்தோம்பும் பண்பும் உங்களுக்கு இயல்பாகவே அமைந்தவை. உங்களது மறைவு "இன்றிருந்தார் நாளையிரார்" என்ற உண்மையினை நன்கு அறிய வைத்துள்ளது. சடுதியாக இவ்வுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்த காரணம் ஒருவரும் அறியோம். தங்களது பிரிவினால் துயருறும் தங்கள் கணவர், சகோதரியின் பிள்ளைகள், உறவினர் அனைவருக்கும் ஆழ்ந்த ஆனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். உங்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக. இவரது நினைவு எமது நெஞ்சத்தை விட்டு அகலாது.

***Mr. இளையதம்பி லோகேஸ்வரன்***
***Ireland***
***Professor இளையதம்பி அம்பிகைராஜா***
***Sydney, Australia.***
***Dr. இளையதம்பி குகனேஸ்வரன்***
***U.S.A.***

## நெஞ்சங்களில் நீங்கா இடம்பெற்ற ஒரு தாய்

இப்பாரினில் திலகவதி என்னும் பெயருக்கு உரித்தான திலகம் - குங்குமம், பொட்டு, வதி - இடம், மனை திலகம் கொண்ட மனையாள், தருமத்தின் சிகரம் - தருமராசா என்ற பதி இடத்தில் என்றென்றும் ஒளி வீசி, நீங்கள் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் கூடிப் பிறந்த சகோதரர்கள், உறவினர்களை ஒன்று சேர்த்து அரவணைத்து, அன்பையும் பாசத்தையும் அளித்து எல்லோருடைய மதிப்பையும் அன்பையும் பெற்ற எங்கள் பேபி அக்கா, நீங்கள் எம் நெஞ்சங்களில் நீங்கா இடம்பெற்ற ஒரு தாய். உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் பிரார்த்திக்கின்றோம்.

***ஜெயராஜன் குடும்பம்***

# என் அன்பு மாமிக்கு கண்ணீர் மடல்

**கோடி** கொடுத்தும் உறவினரோடு வாழ்வதுதான் இன்பம், கூட வாழ்ந்து சேர்ந்திருந்து உண்பது பேரின்பம் என்னும் கவிஞரின் வாக்குக்கமைய எனது மாமா தேடியெடுத்த மாமியோ, அவரின் சிரித்த முகமும், தன்னிடம் வருபவர்களையெல்லாம் அரவணைத்து பாசத்துடன் விருந்து கொடுத்து சீராட்டும் தன்மையும், அதன் பெருமையும் மாமியையே சாரும். அன்பான மாமியே, ஆருயிர் அம்மாவே, ஆறாத்துயரில் என்னை ஆழ்த்தி விட்டுச் சென்றதேனோ. மீளாத்துயில் கொண்டனீர் மீண்டு வரமாட்டீரோ. நீங்கள் போன இடம் தெரியவில்லை. மாமி மனதில் மருமகளாய் எண்ணாமல், மகளாய், மனமார புன்சிரிப்போடு நீங்கள் கூறும் வாழ்த்துக்கள் கேட்டு மனமகிழ்ந்து போவேன். மாமி இனி எங்கே கிடைக்கப்போகின்றது அந்த நல் வாழ்த்துக்கள். என்னுடன் தொலைபேசியில் உரையாடி என்னையும் கணவர், பிள்ளைகளையும் கொழும்பு வரவழைத்து எங்களை பாசத்தோடு உபசரித்து அனுப்பியமை இன்னும் என் கண் முன்னே நிற்கின்றது. இவ்வாறு எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த உங்களை இப்போது இறைவன் எம்மை எல்லாம் பிரித்து தன் வசம் கூட்டிச் சென்றுவிட்டார். உங்களை இழந்து தவிக்கும் மாமாவும் நாங்களும் ஆறுதல் அடையவும், உங்கள் ஆத்மா சாந்தியடையவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ள முடியாமையினால் மிகவும் மனம் வருந்துகின்றேன்.

*அன்பு மருமகள்*
***கு. தெய்வராணி.***

# ஆதரவின்றித் தவிக்கின்றோம்!

ஆசையம்மா! இன்று நீங்கள் எங்களுடன் இல்லை. இதை நினைக்கும் போது ஏன் இந்தச் செய்தி பொய்யாகி விடக்கூடாது என்று தோன்றுகிறது. எங்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி அரவணைக்கும் ஆசையம்மா இல்லை எனும் போது மனம் கனக்கின்றது. நாங்கள் சிறுபிள்ளைகளாக இருந்த காலங்களிலிருந்து எங்களை விட்டுப் போகும் வரை எங்களுக்கு அளித்த அன்பும் ஆதரவும் சொல்லில் அடங்காதவை. நாங்கள் பல்கலைக்கழக விடுதியில் இருந்த காலத்தில், யாழ்ப்பாணம் செல்ல முடியாத சூழ்நிலையில் கொழும்பிற்கு வந்தால் உடனே சாப்பிட்டு விட்டுப் போகுமாறு கூறுவீர்கள். அது எந்த நேரமாக இருந்தால் கூட! சாப்பாடு என்றால் அது சாதாரணமானதாக இல்லாமல் விஷேடமானதாகத்தான் இருக்கும். விடுதிச் சாப்பாட்டைப் பற்றி எனக்குத் தெரியும். நன்றாகச் சாப்பிடு என்று கூறுவீர்கள். சொந்த வீட்டிற்குச் செல்லாத குறையை பலமுறை எங்களுக்குத் தீர்த்துள்ளீர்கள். ஆனால் இன்று நீங்கள் எங்களுடன் இல்லை! வீட்டிற்கு வந்தவுடன் சிரித்த முகத்துடன் வாருங்கள் வாருங்கள் என்று அழைக்கும் ஆசையம்மாவை நாம் இனி எப்போது காண்பது? எங்களை உங்கள் சொந்தப் பிள்ளைகள் போல் கவனித்தீர்கள். ஆனால் நீங்கள் யாரிடமும் உதவி பெறாது சென்றுவிட்டீர்கள். இறைவன் உங்களுக்கு மேலான ஒரு இடத்தை ஒதுக்கி இருப்பார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

எனது திருமணம் முடிந்து உங்கள் வீட்டிற்கு வரப்போகின்றோம் என்று தொலைபேசியில் அறிவித்த போது வாருங்கள் வாருங்கள் என்று அழைத்தீர்களே ஆசையம்மா! அதுதான் நான் உங்களின் குரலைக் கடைசியாகக் கேட்பது என்று எனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லையே! வீட்டிற்கு வந்த போது வழமையாக வரவேற்கும் ஆசையம்மா அங்கு இருக்கவில்லை. ஆசையப்பா தான் நின்றார். ஆசையம்மாவிற்கு சிறு வைரஸ் காய்ச்சல் உடனடியாக வைத்தியசாலைக்குப் போக வேண்டியிருந்தது. ஆனால் நான் நின்றிருந்தால் எப்படிக் கவனிப்பேனோ அப்படி வருகின்ற பிள்ளைகளையும் கவனிக்கும்படி ஆசையம்மா கூறினார் என்று ஆசையப்பா சொன்னார். தான் இல்லாத இடத்திலும் தனது உபசாரம் கிடைக்க வேண்டுமென்று நினைக்கும் நீங்கள் எங்களை அனாதரவாக விட்டுச் சென்றுவிட்டீர்கள். நீங்கள் எங்களுக்குச் செய்த பண உதவி, பொருள் உதவிகள், அதனிலும் மேலான அன்பும் ஆதரவும் நீங்கள் இல்லை எனும் போது எங்களைத் தடுமாற வைக்கின்றன. மற்றவர்களுக்குக் கொடுக்கும் போது வரும் சந்தோஷமே பெரும் சந்தோஷமாக நினைத்து வாழ்ந்த ஆசையம்மாவை இனி எங்களால் காணமுடியாது. ஆனால் அவர் எங்களில் காட்டிய அன்பும் எங்களுக்குச் செய்த உதவியும் அவரை எங்கள் இதயங்களில் உயர்ந்த இடத்தில் வைத்துள்ளது.

***கிரி, சுகி, ரூபன், பத்மா***

# உடன்பிறவா சகோதரியின் உள்ளக் குமுறல்

உங்கள் மறைவுச் செய்தி உடைந்த உள்ளங்கள் உங்களைப் பற்றி கண்ணீரால் கதை வடிக்கின்றன.

இருபத்திமூன்று வருடங்களுக்கு முன்பு இருபாலையில் அறிமுகமாகி இறுதிவரை எங்கள் இன்பதுன்பங்களில் பங்குபற்றினீர்கள். நீங்கள் செய்த உதவிகளை மறக்க முடியுமா? யாழ்ப்பாணத்தில் திருவிளக்குப் பூசைக்குச் சேர்ந்து சென்றோம். வரலக்ஷ்மி பூசை செய்ய வருடம் தோறும் வரச்சொன்னீர்கள். உங்களுடன் சேர்ந்து செய்த பூசைகள் எத்தனை, உண்ட உணவு விடுதிகள் எத்தனை, கண்டவர் கண்பட்டதினால் காலன் கண்ணில் நீங்கள் பட்டீர்களோ!

எங்கள் எல்லோரையும் விட்டு நிரந்தரமாக பிரியப் போவதாக உங்கள் உள்மனதில் பட்டதால் தானோ உங்களுக்கு நெருக்கமானவர்களுக்கு பிரியாவிடை விருந்தொன்று கொடுத்தீர்கள்.

கொடுப்பதில் கொடையாளி நீங்கள்
அறுசுவை உணவு அளிப்பதில் அமுதசுரபி நீங்கள்
உங்களையே முழுவதுமாக நம்பியிருந்த கணவனுக்கும்
பெற்றதாயினும் மேலாக பாசம் கொண்ட பெறாமக்களுக்கும்,
உங்கள் உற்றார், உறவினர், நண்பர்கள் ஒருவருக்கும் ஒன்றும்
சொல்லாமல் எல்லோரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில்
கொண்டு விட்டீர்கள். எங்கள் மனதில் என்றும் வாழும் உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உடன்பிறவா சகோதரி

***இரத்தினேஸ்வரி இரத்தினசிங்கம்***

## கை கோர்க்கத் துணையானவள்

திரு ஆறுமுகத்திற்கும் திருமதி சற்குணத்திற்கும் பூத்த மகளானவள்,
தருமத்தின் ராசாவினால் தன் கழுத்தை அலங்கரித்தவள்
இல்லை என்னாது கொடுக்கும் மனம் உடையவள்
பிறர் துன்பம் காண மனம் பொறுக்காதவள்
பெரும் ஆவலுடன் சொந்தங்களை ஒன்று சேர்த்தவள்
சுற்றம் சூழ்ந்து கை கோர்க்கத் துணையானவள்
அறுசுவைகளும் ருசிக்கச் சமைத் தூட்டுபவள்
வரலக்ஷ்மியையும் தன்வசப் படுத்தியவள்
தருமத்திற்கு திலகம் இட்டாட் போல் வாழ்ந்தவர்கள் - இன்று
திலகம் பிரிந்து தருமராசா தவிக்கச் சென்றனள்
ஆசை அம்மா என்று பிள்ளைகள் கதற உரிமையானவள்
வணங்கிய லக்ஷ்மியுடன் சுமங்கலியாக ஒன்றினள்
சிறப்புடன் வழியனுப்பினார் அவள் அரசனே,
அவள் நினைவுகளை மட்டும் தினம் சுமக்கவே.

*Vaishnavi Rajkumar*

## Rememberance of Chithi Grandma

You Shined the world with your sweet smile
and now forever, gone a thousand mile.
To everyone, you are kind,
especially, to my mind.
With flying colours, you show motivation,
rising about to special occasions.
Though, sad that you have moved on,
the stars remind us, where you have shone.
You will be missed greatly, but not forgotten,
may your soul, rest in peace.

***Love, Grandchildren***
***Rupan & Nishanthan Kuganesaphavan, Canada.***

# என்றும் மறவாத எங்கள் அன்ரி

வந்திருந்தீ ரெம்வீட்டில் தாய்தந்தை போலிருவீர்
தந்திருந்தீர் விதவிதவாய்ச் சுவையான பட்சணங்கள்
உந்தியிலோர் தொல்லையினால் உயிர்நீத்தீர் உலகமதன்
பந்தியிலே எமையெல்லாம் பரிதவிக்க வைத்துவிட்டே

"அன்ரி அன்ரி" என்றும்மை ஆசையுடன் நாமழைத்தோம்
"நன்றி நன்றி" என்றுமது வாயில்வரு வார்த்தை சுவை
"கன்றி கன்றி" என்றெல்லாம் உலாவந்தீர் நாம்காண
ஒன்றியாய்ச் சென்றுவிட்டீர் ஓயாதுமை நினைவே.

'சிவம்' என்பீர் 'திரு' என்பீர் நீரெம்மை அழைக்கையிலே
தவறா தெமக்கெல்லா நன்மைகளும் தான் புரிந்தாய்
தவம் கிடந்தும் கிடைக்காத பந்தமன்றோ உமதுறவு
அவமே துயின்றனையே அரை வயதில் இது விதியோ

உறுதியுடை நெஞ்சினளாய் உலாப் போந்தீர் எப்போதும்
அறுதியாய் கைநழுவிப் போன சொத்தாய் எம்மைவிட்டு
இறுதிப் பயணம் நீ மேற்கொண்டாய் பரதவித்தோம்
கிறுகிறுத்தே எம்தலைகள் உம்பிரிவை ஆற்றோமே.

உடலைத்தான் உமதென்று சுமந்து சென்றோம் நாமெல்லாம்
விடலைகள் நாமென்றாலும் மறவோமுன் நன்மைகளை
சுடலைக்கோ சென்றுவீட்டீர் சுகமான பயணமென
படலைக்குள் காத்திருப்போம் பழைய நினைவலைகளுடன்.

*சிவம், திருகுமாரசாமி குடும்பம்*

# எங்கள் ஆசை அன்ரி

அன்பின் உருவே ஆசைஅன்ரியே
அறுசுவை அடிசில் செய்து அழியாப் புகழ் பெற்றனையே
அயலவர் அனைவரதும் அகத்தினில் நிறைந்தவளே
அன்னையே இன்று நீ அகிலம் விட்டகன்றனயே

கண்ணில் நீ நிறைந்தாய் கருத்தில் நீ நிறைந்தாய்
காரிகைகளின் விளக்குப் பூசை நீ செய்தாய்.
கண்ணைக் கவரும் பரிசுகள் பலவகைகள்
கருத்துடனே நீ வெளிநாட்டிலிருந்து கொணர்ந்து தந்தாய்

எண்ணிலடங்காது எழுத்திலடங்காது
எம்மிடம் நீ கொண்ட உள்ளார்ந்த பெரும் அன்பு
என் செய்வோம் ஏது சொல்வோம் நாம்
எமன்தான் உனை எமைவிட்டுப் பிரித்தானே.

திருமணமான பெண்களை ஒன்றுகூட்டி
திலகவதி நீசெய்த சுமங்கலிப் பூசை
தினம் தினம் நம்நினைவில் நின்று கனவிலும் கூட இன்று
தீயெனச் சுடுகிறதம்மா.

தர்மராசா செய்த தவப்பயனாய் நீ இத்
தரணியில் அவர் மனைவியாய் வாய்த்தாய்
தருமன் உன்னைக் கொண்டுசெல்ல இன்று
தனியாய் நாம் தவிக்கின்றோமே.

ஆயிரம் காலம் வாழ்வாய் என நாம் நினைக்க
அரும் பொழுதில் எமைவிட்டு நீ சென்றாய்
ஆயினும் இதுதான் உலக நியதியென்றெண்ணி உன்
ஆத்மசாந்திக்காக தினம் தினம் ஆண்டவனை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இங்ஙனம்

***திருமதி. த. சரவணபவன்***
***குடும்பத்தினர்***

## விதி

எல்லாம் இங்கோர் சூதாட்டம்
இரவும் பகலும் மாறாட்டம்
வல்லாள் விதியே ஆடுமவன்
வலியில் மனிதர் கருவிகளாம்
சொல்லா தெங்கும் இழுந்திடுவான்
சோடி சேர்ப்பான் வெட்டிடுவான்
செல்லாதாக்கி ஒவ்வொன்றாய்த்
திரும்ப அறையில் இட்டிடுவான்

எழுதிச் செல்லும் விதியின்கை
எழுதியெழுதி மேற்செல்லும்
தொழுது போற்றி நின்றாலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்
அழுது கண்ணீர் விட்டாலும்
அபயம் அபயம் என்றாலும்
வழுவிப் பின்னால் விழுந்தாலும்
வார்த்தை மாற்றம் செய்திடுமோ.

*(உமார்கய்யாம் பாடல்)*
*தமிழில் கவிமணிதேசிகவிநாயகம்பிள்ளை*

ஓங்கார மேடையின் மேலேறி நின்றேன்
ஒன்றையும் காணேனடி - குதம்பாய்
ஒன்றையும் காணேனடி.

தூங்காமல் தூங்கும் சுகம் வந்து வாய்த்தது
சும்மா விருந்தேனடி - குதம்பாய்
சும்மா விருந்தேனடி.

ஆங்காரம் போச்சுது ஆனந்தம் போச்சுது
அவனேநா னானேனடி - குதம்பாய்
அவனேநா னானேனடி.

நீங்காத நின்மல நிட்டை பலித்தது
நீநா னில்லையடி - குதம்பாய்
நீநா னில்லையடி.

*நற்சிந்தனை*
*யோக சுவாமிகள்*

# My Dear Baby

During the war a baby was born with a silver spoon in Malaysia and that was my sister eleven years younger to me. I met her when she was three years old, very thin and always sucking her thumb.

I lived with her only for two years as I had to go to Madras to continue my studies. After ten years when I went to Jaffna Baby was a grown up girl going to school.

After our mother's death she comes twice a year to be with us, till she got married. She comes during our holidays so very often we go sight seeing to historical places. Once we went to Kashmir for a week, then to Delhi and Agra to see Tajmahal.

Many times she has gone to Thiruchendur temple (a week before Deepavali) with our friend. She stays there for ten days fasting and praying.

My daughter from U.S.A. came in June and stayed with Baby for twenty days.

When I came on the 9th of September I was shocked to see my sister in the hospital in a very bad condition. I prayed to God "May your Holy will be done".

Instead of my sister writing this Memory Souvenir for me, I am very sad to write for her.

"May her soul rest in peace"

*Mrs. M. Joseph*

## ஆசையம்மா எங்கு சென்றனையோ

பாசமுடன் மழலையிலே வளர்த் தெடுத்த
ஆசையம்மா உம்வதனம் என்று காண்பேன்
அன்னைக்கு அடுத்ததாய் அர வணைத்து
பின்னமிலாப் பேரன்பு காட்டி நிற்பீர்
சங்கத் தமிழ்கூறும் செவிலித் தாய்போலன்றோ
இங்கிதமாய் எந்தனுக்கு ஏதுஞ் செய்வீர்நீரே
எந்தனைக் காணாது நினைவு வந்தால்உம்தனக்கு
எம்மிடமே ஓடிவந்து ஆர அரவணைப்பீர்
பட்சணங்கள் பலவுமே செய்து கொண்டு
பரிவுடனே தந்துமே இன்பங் காண்பீர்
எந்தன் வளர்ச்சி கண்டு இன்பம்காணும்
பந்தமென நிறைவு காட்டும் தங்களையே
தேசமெல்லாந் தேடிஅலைய எந்தன் ஆசையம்மா
சென்றவழி சொல்லாது எங்கே சென்றீர்

*S. திலக்*

# பெறாமகனின் கண்ணீர் மடல்

நம் மெல்லோரையும் ஆறாத் துயரத்தில்
தவிக் கவிட்டுச் சென்றீரோ திலகவதிச் சித்தியம்மா!
வார ங்களைந்து கழிவதன்முன் நானன்றோ
தங்கள் குரலைத் தொலைபேசியில் கேட்டோமம்மா.
ஒரு மணிநேரமாய்த் தங்கள்சுகம் விசாரித்ததும்,
மிகுந்த அன்புடனே பாசமாய்ப் பேசியதும்,
நேற் றின்று போலல்லவோ இருக்குதம்மா எங்களம்மா!
அப் போதுங்கூட சாப்பாட்டைப் பக்குவமாய்ப் பத்தியமாய்
எண் ணெயுறைப்புத் தவிர்த்து உண்ணவேண்டுமெனச் சொல்லியும்
அதற்குள்ளே காலன் மனம் கேட்கவில்லை சித்தியம்மா!

எம தன்னையைத் தன்சகோதரிபோல் பார்த்ததுவும்,
எம் தம்பியர் தங்கையை தம்பிள்ளைகளாய் நேசித்ததும்,
எம் மனதில் காலமெல்லாம் ஆழமாய்ப் பதிந்திருக்கும்.
எம் பேரன் கா.க.விஸ் வலிங்கம் எம்மவர்க்குத் தேடித்தந்த
அருமையான பொக்கிஷம் பாசமிகுதில கவதியம்மா
இவ்வளவு சீக்கிரமாய் எம்மைவிட்டுப் போனீரே!
பேரனார் கா.க.வி.யையும் அதியுயர் பண்புடனே
தன் தந்தைபோல் நேசித்ததும் அவரது முதுமையிலும்
பணிவிடைகள் பலசெய்து அன்புடனே பார்த்ததுவும்
அன்பினிற்கோர் திருவுருவாய் உறவுக்கோர் அணிகலமாய்
எம் மனதில் என்றென்றும் நிலையாகப் பதிந்திருக்கும்.
எம் மனைவி மக்களுடன் சித்தியம்மாவை நினைந்து நினைந்து
சமுத்திரங்கள் பல கடந்த கனடிய மண்ணில்
எம் கண்ணீர் வரி வரியாய்ச் சொரிகின்றனவே!
எம் மருமைத் திலகவதி சித்தியம்மா ஆத்மீகச் சாந்திபெற
என்றென்றும் இறையருளை வேண்டி நின்று வழிபடுவோம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*அன்புடன் பெறாமகன்*
***சி. குகநேசபவான்***

# நேசமிகு நெஞ்சே

கோவையம்பதி வாழ்ந்த குலக்கொழுந்தாய்
தர்மராஜாவின் தர்ம பத்தினியாய்
அயலவர்க்கும் அன்புக் குழந்தைகட்கும்
ஆசை அன்ரியாய் உலா வந்த
தித்திக்கும் பேச்சுடைத் திலகவதியே !
அன்பு மனமும், ஆசை முகமும்,
இனிய பேச்சும், ஈடில்லாக் கருணையும்,
உயரிய பாசமும், ஊரெங்கும் நட்பும் ~ கொண்டு
எம்மனம் நிறைந்த ஏந்திழையே ~ உன்
ஒப்பில்லாக் கைமணமும்
ஓடி ஓடி உபசரிக்கும் பாங்கும்
அயல் நாடு சென்ற போதும்
அனைவரையும் மனத்திருத்தி
அரும் பரிசுகள் கொண்டு தந்து ~ உன்
அன்பகலா உள்ளமும் ~ எம் நெஞ்சை
விட்டகலா நிற்கிறதே ~ எம்
இனிய தோழி! இனிவரும் நாட்கள் ~ எமக்கு
இருளாய்த் தோன்றிடுதே
நேசமிகு நெஞ்சே ~ உன்னை
நினைத்தால் மனம் நெகிழ்ந்திடுதே
ஈசனடி சேர்ந்த இனியவளே ~ உன்
ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனை அனுதினமும்
வேண்டி நிற்பதன்றி வேறொன்றும் யாமறியோம்

***அம்பிகை தர்மலிங்கம்***
*இளைப்பாறிய ஆசிரியர்,*
*யாழ்வேம்படி மகளிர் கல்லூரி.*

## தொலைவிலிருந்து

ஆசையாய் ஆசை அன்ரி என்று எல்லோராலும்
அன்புடன் அழைக்கப்பட்டீர்கள்
இன்று எம்மை மீளாத்துயரில் மூழ்கவிட்டு
நெஞ்சங்கள் துடிக்க நிலையாகப் பிரிந்து
துயின்று விட்டீர்கள்

இனி நாம் ஆசை அன்ரி என்று யாரை அழைப்பது?
எல்லார் இதயத்திலும் நேசங்களை வளர்த்துவிட்டு
இன் முகத்துடன் வாழ்வின் எல்லைக்குச் சென்றதேனோ?
உதவியென்றாலும் உபசாரமென்றாலும்
உள்ளம் உவந்து வழங்கும்
எங்கள் ஆசை அன்ரி இனி எங்கே....?

எவர்க்கும் "இல்லை" என்று எதையும் சொல்வதில்லை
இன்று எங்களுடன் நீங்கள் இல்லை
என்று நினைக்க எங்களால் இயலவில்லை
எல்லோர்க்கும் தைரியம் சொல்லிவிட்டு
எம்மையெல்லாம் சோரவிட்டு எங்கே போய்விட்டீர்கள்?

மைல்கள் தொலைவில் இன்று நாம் இருந்தாலும்
என்றும் மனதைவிட்டு அகலா உங்கள் நினைவுகள்
பிரிவு இன்று நிரந்தரமாகிவிட்டபோது
நினைவுகள் மட்டும் நெஞ்சை வட்டமிடுகின்றன....

*என்றும் உங்கள் பிரிவுத் துயரால் வாடும்*

***கவிதா, துவி***

*(திருமதி. கவிதா சிவகரன்)*
*(திருமதி. துவி பிரபாகரன்)*

# பூவோடும் பொட்டோடும்

பூவோடு, பொட்டோடு, பட்டு உடுத்தி
பொன் நகையும் நிகர் அற்ற புன்னகையும் பூர்த்து
சலங்கை ஒலி முன்னோட, பரந்த மனத்துடன் பாச
பொழிவுடன் வந்தாள்! நிலைக்கொண்டாள்! நினைக்க முன் மறைந்தாள்!

சொந்தங்களையும் பந்தங்களையும் ஒன்றிணைத்த தாய் அவள்!
நெஞ்சங்கள் அழுகையில் ஆறுதல் கூறிய சேய் அவள்!
நாவுக்கரசரின் நிலை நிறுத்திய திலகவதியார் - அன்று,
நம்மிடத்தே தோன்றி மறைந்தாளோ - இன்று.

தர்மத்தின் முடி மன்னனுக்கு! தோள் கொடுத்த துணைவி அவள்
தாங்க முடியாத துயரங்களில்! திடமான சுமைதாங்கி அவள்
கலகலத்த சிரிப்புடன் சிரம் பார சிந்தனை விளக்கவள்
சிரிப்புடனே சிந்தனை செய்யும் சின்ன அம்மா அவள்
வரலட்சுமி பூசையினை புரிந்த திலகவதியாரே
திலகத்துடன் செல்ல நீ கேட்ட வரம் அதுவோ!

பூவுடல் பிரிந்தும்! நம்முடன் வாழும் மகாலட்சுமி!
சிந்தனையின் நித்தம் நிகழும் சுந்தரலட்சுமி!
பின்னவள் பேத்தி நாம் என்றும் போற்றும்
உம் வழியில் நாம் வாழ்வோம் "பேபி மாமி!"

***Resheka Sridharan***

# பிரார்த்தனை செய்வோம்

எங்கள் மதிப்பிற்குரிய பெருந்தகை திலகவதி அம்மையார் பிரிந்த செய்தி அறிந்து மிகவும் வருந்தினோம். காலத்தால் சமூகத்திற்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் ஒப்பரிய தொண்டாற்றிய உத்தமியைக் காலன் கவர்ந்து விட்டான்.

ஏழை, பணக்காரர், படித்தவர், படிக்காதவர் என்ற பாகுபாடின்றி எல்லோரையும் சரிசமமாக இன்முகம் காட்டி வரவேற்றுப் பழகும் பண்பாளர். 'உடுக்கை இழந்தவன் கை போல் இடுக்கண் களைவது நட்பு' என்ற வள்ளுவன் வாக்குக்கமைய வாழ்ந்து காட்டியவர். தன் நலன் கருதாது, பிறரின் இன்பதுன்பங்களில் பங்கு பற்றுவது, அவர்களின் நல்வாழ்விற்கும், முன்னேற்றத்திற்கும், உறுதுணையாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர்.

தனது வாழ்நாளில் பெரும்பகுதியைத் திருத்தல யாத்திரைகளுக்குச் சென்று இறைவழிபாட்டிலும் பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டதுடன், அதற்கமைவாக பிறரிடமும் அன்பு, இரக்கம், கருணை முதலியவற்றையும் காட்டிவந்தார்.

தனது சமயத்தை மதித்து அதில் எவ்வாறு ஈடுபாடு கொண்டாரோ அதுபோல தனது மொழியிலும் ஈடுபாடு கொண்டார் என்பதற்கு உதாரணமாக பின்வரும் விடயத்தைக் கவனிக்கலாம்.

அம்மையார் தன்னகத்தே உள்ள அறிவாற்றலை மற்றவர்கள் அறியவும், அவர்கள் அனுபவிக்கவும் வேண்டுமென்ற நன் நோக்குடன், கனடாவில் எழுதி ஆக்கிய தத்துவங்கள், கட்டுரைகள், கதைகள் மற்றும் கவிதைகள் ஆகியவற்றை அந்நாட்டின் வானொலியிலும், பத்திரிகைகளிலும் சில வருடங்களுக்கு முன் வெளியிடச் செய்தவர்.

அன்னாருடன் பழகியவர்களின் மனங்களில் அவர் நாமம் என்றும் நிலைத்து நிற்கும்.

மனத்திற்குச் சுமையான இக்கால கட்டத்தில் அம்மையாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். அவவின் பிரிவினால் சோகமயமாகியுள்ள குடும்பத்தினருடன் சங்கமமாகிக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! ! சாந்தி ! ! !

நல்லதம்பி கிருஷ்ணபிள்ளை
கிருஷ்ணபவான் யாழ்ப்பாணம்

# FAREWELL DEAR THILAGAWATHY

I got to know Mrs. Thilagawathy Thatmarajah only a few months ago. I remember very clearly the first day I met her. It was on 6th December 2004 at the launch of a book written by Dr. S. Vasanthy, a former pupil of mine. I believed that Mrs. Thilagavathy was Dr. Vasanthy's mother.

I also remember the last time I saw Thilagawathy when she was conscious. It was at the Apollo Hospital. She was terminally ill at that time. But she put her hands together and greeted me warmly. In retrospect, it was a farewell greeting, because a couple of days later she was no more.

My encounter with Thilagawathy was essentially in the capacity of a doctor who also happened to be a friend of the family. It was a brief encounter. But when she passed away, I felt as though I had lost a long standing friend. I don't know why. What I do know is that she was a very kind and loving person.

Born in Malaya, she had come to Sri Lanka as a child of three to join her elder sister Poopathy. She had lived and grown up in Jaffna and had married Mr. K. M. Tharmarajah who is a Notery Public and legal assistant. I learnt later that they had no children of their own. But fortunately for them and for the four girls and one boy concerned, they inherited the family of Mrs. Thilagawathy's sister Poopathy. Since Poopathy's husband had died prematurely, leaving the children to the care of Thilagawathy. They had come to regard the children as their very own. That is how I came to believe that Thilagawathy was Dr. Vasanthy's mother. The children loved their aunt whom they called **"Asaiamma"** deeply. They were all abroad when Thilagawathy fell terminally ill, but almost all of them were by her bedside on the day she breathed her last.

In modern times, when bonds between children and parents appear to be under strain, and physical separation of parents and children across continents due to exigencies of our time is aggravating the strain, it was very moving to see these children around their mother's bed at the time she was leaving them forever.

Farewell, dear Thilagawathy. **"May flights of angels sing thee to thy rest".**

***Professor Carlo Fonseka***
*University Grants Commission*
*20, Ward Place,*
*Colombo - 07.*

# Of "Mrs. T"

"Mrs.T" was what my father used to call her. It was a term of endearment for Thilakavathy Tharmarajah who so suddenly passed away from our midst leaving us forlorn.

My parents had known her for over two decades and Tharmarajah even longer. They have over time grown to care for them and love them as part of the family. This strong bond stood in good stead and grew even stronger when my parents were forced to leave Jaffna Town due to the stranglehold of belligerent forces in the year 1985 and move to our village Sangarathai, Vaddukkodai. On the way they parried a while with the Tharmarajahs. My Mother would often remember, in conversation with me and with much affection, the kindness and hospitality shown to them and often speak of Thilakavathy's sincerity of purpose, love and affection.

During the last year of his life my father often wrote to Tharmarajah from Sydney and would always make mention of her, ending his letters with the words "Regards to Mrs.T" - the result of a deep and abiding affection for her sterling qualities of compassion, love, understanding and the desire to do selfless service.

Tharmarajah was indeed a lucky man to have her as his spouse.

Born in Malaysia into a family of learning, character and strong and genteel lineage, both on the paternal and maternal side, it was perhaps no surprise that she was what she turned out to be. Both nature and nurture had blessed her well.

Dr.Gurusamy was her father's brother. Her mother, the sister of Mr.N.T.Sivagnanam, Procter and Notary Public of repute.

Her sisters children, on whom she had showered care and affection turned out to be successful academics and professionals straddling the continents. An achievement of which she would have been justly proud, but with her characteristic humility. Schooled at Vembadi Girls college, she is one, the College will be proud to claim an old girl.

I remember with much emotion and gratitude her gesture in sending me 'Paththiam' meals when I was recuperating after returning from the nursing home pursuant to an injury caused by an accident at home. She would send the meals through Tharmarajah and would insist that I eat it all and will call back to check if I had done so as well.

From this single act of kindness I was able to understand and discern what my parents had always recognized and known, her overwhelming goodness, which comes to her so naturally.

She was an ardent worshipper of the "Shakthi". I will therefore not say, may her 'Atma' find eternal bliss.

**I know it will.**

***Kanaganayagam Kanag-Isvaran***

# FOR MY SISTER-in-LAW "BABY"

When my father in law visited us in Hastlepool around 1980 he talked a lot to our children Michael, Asha and Christian about Jaffna, his girls (grand daughters) and Baby (Mrs Thilagavathy Tharmarajah), who devoted herself to caring for him and looking after every of his needs.

I first met Baby on a visit to London when a family friend, Mr Sivayogaiswaran introduced her and my niece Nala to me in my home. Baby's charming and bubbly personality soon broke the ice and I knew then that we will be friends. I also was so touched to see her brother's (my husband's) reflection in her.

On my first visit to Sri Lanka in 1995 I was greeted by all available family members, a bit confusing for me, but Baby and Tharma made me so welcome and made me feel as part of the family.

My eldest son Michael and I came to Colombo for Shanthi's and Gaja's wedding. Michael too felt so at home with Baby-auntie and was soon taken by her charm and hospitality. He still talks about those days, especially about those wonderful spicy curries she cooked for him.

We all are so shocked and extremely sadden by her premature passing away but her kindness and warmth will stay in our memory always.

**Christine Siva-Jothy**
**1 Rosenau Cresent**
**London SW11**
**UK**
***London 20th September 2005***

## To my Grandma

I remember when I was very small, maybe three years of age, when I first saw Asai Amma. She had come to London, and was stayed with us. While she was there it was my birthday. She celebrated it lavishly, she showed great content and commitment to make my birthday wonderful. That I never forgot for the rest of my life, but I wish I had said "Thank you" for what she had done for me.

She always cooked the best food, I loved her food, and the variety of food she cooked was delicious and mouth watering. When she was in London, in our house, we would eat like the Royal Family. She always loved and cared for me, I was in a way her grandchild, as she did not have any children of her own. She treated my mother like her daughter, and showed love and kindness to her.

Asai Amma is what I have always called her, I never called her by her real name, I don't even know what her real name is, that is what type of bond we had in between us, it is a great loving bond.

The most important thing I remember about her was her hospitality. When we visited Sri Lanka she would always keep us under her roof, she would feed us without limits, she would show her full kindness. When I am with her it is like I have no care in the world, it is like I am pure, it was a great feeling.

Even though Asai Amma is not with us today, she is with us in our hearts. I will never forget her, she was and is a great friend, and I will keep her memory close to my heart, till the day it stops. And remember, she has not left, she has moved on to a better place.

**Vagish Sothinathan**

**The UK**

***25th September 2005***

# என் அன்பிற்குரிய இல்லத்தரசி

**(உள்ளதை உள்ளவாறு கூறும் என் இதயக்குமுறல்)**

இன்றைய சமுதாய வாழ்க்கையில் துணைவன் - துணைவி, இல்லம் - இல்லாள் ஆகியவை முக்கியமானவை.

இவ்விரு விடயங்களில் நாங்கள் இருவரும் எவ்வாறு வாழ்ந்தோம் என்பதை எனது அன்பிற்கும் மதிப்புக்குமுரிய டாக்டர் எஸ். மகேந்திரராசாவும், திருமதி. குமார் பொன்னம்பலம் ஆகியோர் இவ் நினைவு மலரில் வெளியாகும் நினைவுக் கட்டுரையால் உண்மையை உள்ளவாறு கூறியிருக்கிறார்கள். நானும் ஒரு சிலவற்றைக் கூறி எனது நன்றிக் கடனை வெளிப்படுத்த வேண்டியுள்ளது.

1. நான் காரைநகரிலே பிறந்து, அவ மலேசியாவில் பிறந்து யாழ்ப்பாணத்தில் வளர்ந்தவ. எங்கள் இருவருக்குமிடையே நடை, உடை, பாவனை அனுகுமுறை ஆகியவற்றில் பல வித்தியாசம். ஆனால் நாங்கள் இருவரும் ஒற்றுமையாக வாழ்ந்தோம். அதற்குரிய காரணங்கள்:-

i. எனக்குரிய நற்குணாதிசயங்களையும் குறைகளையும் அவ நன்கு அறிந்திருந்தார். அதேபோல் அவவிற்குரிய நற்குணாதிசயங்களையும் குறைகளையும் நான் நன்கு அறிந்திருந்தேன்.

ii. நான் ஏதும் செய்யவேண்டும் என விரும்பினால் தனக்கு விருப்பம் இல்லாதுவிட்டாலும் கூட எனது விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைத்து செயற்பட்டு எனது விருப்பத்தை நிறைவேற்றினார். நானும் அதே மாதிரி நடப்பது.

iii. எனது உறவினர்களையும், நண்பர்களையும் அவ நன்கு மதித்து செயல்பட்டார். நானும் அதே மாதிரி செயல்பட்டேன்.

iv. பட்டின வாழ்க்கையை விட கிராமப்புற வாழ்க்கை மேலானது என்பது என் கருத்து. அதற்குரிய காரணங்களை விளக்கியபோது அவ ஓரளவு ஏற்றுக்கொண்டா. அதனால் அவ கிராமப்புற மக்களை ஒருபொழுதும் புறக்கணித்தது கிடையாது. மதித்து நடந்தவ.

2. எனது தொழில் ரீதியான கடமையுணர்ச்சியினால் எனது துணைவியாருக்கு துன்பங்கள், கஷ்டங்கள் ஏற்பட்டதுண்டு. "Good worker bad husband". ஆனால் துணைவன் என்ற கடமையுணர்ச்சியினால் அவ இன்புற்று வாழ என்னால் இயன்ற சகலதையும் செய்தேன் என என் மனத்திருப்தி. துணைவியாரும் என் செய்கைகளை நன்குணர்ந்தா.

3. தனது சகோதரங்களின் பிள்ளைகளை தனது பிள்ளைகள்போல அன்பைச் செலுத்திளார். அதுமட்டுமல்ல, தனது மற்ற அன்பர்களுடைய பிள்ளைகளிலும் அன்பைச் செலுத்தினார் என்பதை இவ் நினைவு மலரிலிருந்து அறியக்கூடியதாக இருக்கிறது.

4. அவவின் பெறாப் பிள்ளைகள் பிள்ளைகளைப்போல் அன்பு காட்டி செயல்பட்ட சில செயல்களை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

அ. மருமகன் டாக்டர் சோதிநாதனும் பெறாமகள் பேராசிரியர் நளாயினியும் இன்றைய காலகட்டத்தில் கொழும்பில் நாங்கள் குடியிருக்கும் இல்லத்தை வாங்கி எங்களை அவ்வில்லத்தில் அமர்த்தியுள்ளார்கள்.

ஆ. துணைவியார் இறப்பதற்கு முன் மூன்று மாதங்களாக சுகயீனமாக இருந்தா. டாக்டர் சோதிநாதன், திருமதி சோதிநாதன் அவர்கள் பிள்ளைகள் உட்பட U.K. இல் தொழிலாற்றியும் கல்வி கற்றபொழுதும் கொழும்பிற்கு நான்கு முறை வந்து இரு மாதங்களாக கொழும்பிலிருந்து வேண்டிய உதவிகளைச் செய்தார்கள்.

இ. நாங்கள் இருக்கும் இல்லம் அவர்களுக்குரியதாகவிருந்தும் எங்களுக்கு எவ்வித இடையூறுமின்றி Hotel இல் தங்கி ஆவன செய்தார்கள்.

ஈ. துணைவியார் தனது உறவினர்கள், அன்பர்கள், அன்பான தனது பிள்ளைகள் யாவரையும் ஒன்று சேர்த்து கலந்துரையாட வேண்டும் என்ற நோக்கத்தை, டாக்டர் சோதிநாதனும் திருமதி சோதிநாதனும் Hotel Hilton இல், அவரின் நெருங்கிய உறவினர்களையும் நெருங்கிய அன்பர்களையும் சந்திக்கச் செய்து, துணைவியாரின் நோக்கத்தை நிறைவேற்றினார்கள்.

உ. அவர் அன்பு செலுத்திய பெறாமகள் டாக்டர் ஜனனி அமெரிக்காவிலிருந்து ஓய்வெடுத்து இன்புற்று வாழ கொழும்பு வந்திருந்த சமயம் அப்பலோ ஆஸ்பத்திரியில் Radiologist Consultant ஆக கிழமைக்கு நான்கு நாட்கள் மாத்திரம் வேலை செய்த சமயம் அவவுக்கு சுகயீனம் ஏற்பட்டபடியால், அமெரிக்காவுக்கு போகவேண்டிய நேரம் வந்தும் செல்லாமல் கொழும்பில் தங்கியிருந்து வைத்தியத்துறையிலே தன்னால் இயன்றளவு அவவின் உயிரைப் பாதுகாக்க முயற்சித்தும், உண்மையான சுகயீனத்தை கண்டுபிடித்தும், விதி சதி செய்துவிட்டது. டாக்டர் ஜனனிக்கு உதவியாக அவரின் கணவன் காமேஸ் பக்கபலமாக நின்று ஆவன செய்தார்.

ஊ. மற்ற பெறாமகள் டாக்டர் வசந்தி தேவராசா ஸ்ரீஸ்கந்தராசா கனடாவிற்கு சென்று அண்மையில் வைத்தியதுறையுடன் சம்பந்தப்பட்ட வேலை செய்த உத்தியோகத்தை இராஜினாமாச் செய்து, கொழும்பு வந்து, தனது ஆசையம்மாவுடன் பக்கத்திலிருந்து இறுதிவரை தன்னால் இயன்றளவு துணையாக செயல்பட்டார். அதுமட்டுமல்ல, தானும் தனது சகோதரி ஜனனியும் கற்ற வைத்தியத்துறை அனுபவத்தைக் கொண்டு, தங்கள் ஆசையம்மாவின் உயிரைப் பாதுகாக்க இறுதிவரையும் தங்களால் இயன்ற முயற்சியை எடுத்தார்கள்.

எ. அவவின் மற்ற சகோதரி பாக்கியம் ஜோசப்பின் மகள் பிரியா அமெரிக்காவிலிருந்து கொழும்பிற்குத் தனது இரு பிள்ளைகளுடன் வந்து, மூன்று கிழமையாக அவவுக்குப் பக்கத்தில் நின்று ஆவன செய்தார்.

ஏ. ஆசையம்மாவின் உயிரைப் பாதுகாக்க டாக்டர் சோதிநாதனும் நளாயினியும் இறுதி நான்கு நாட்கள் பெரும் தொகையான பணத்தை செலவு செய்து சகல முயற்சிகளும் எடுத்தார்கள்.



ஐ. ஒருவரின் இறுதிக்கிரியைகளில் ஆண் பேரப்பிள்ளைகள் உட்பட பந்தம் பிடிப்பது முக்கியமாக சமுதாயத்தில் பேசப்படுகின்றதும், முறையும் ஆகும். அந்த வகையில் அன்னாரின் மரணச் செய்தியைக் கேட்டதும் அன்னாரின் பெறாமகள் ஜெயந்தியின் ஆண் பிள்ளைகளான ஜெகன், அகிலன் ஆகிய இருவரும் U.K. இல் இருந்து வந்து அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கடமையைச் செலுத்தினார்கள். அத்துடன் அவாவினுடைய அன்பு, பாசம் நிறைந்த வினேஜ்ம் பந்தம் பிடித்து தன் கடமையைச் செலுத்தினார்.

ஒ. பெறாமகன் குருநாதன் துணைவியாரின் நோயின் நிலையை சரியாக அறிந்த பின் உடனடியாக கனடாவிலிருந்து கொழும்புக்கு வந்து, தனது அன்பைச் செலுத்தி ஆதரவை தெரிவித்தார். அவ ஓரளவிற்கு சுகம் அடைகிறார் என்பதை அறிந்ததும் கனடா திரும்பினார். கனடா திரும்பிய ஒரு கிழமைக்குள் அவவின் நிலை மாறுதலடைகின்றதை அறிந்ததும், உடனே இலங்கை திரும்பி அவவின் ஆன்மா பிரியமுன் அவவைப் பார்த்த பின், அத்துடன் சோதிநாதன் குடும்பமும் U.K. இல் இருந்து வந்து பார்த்த பின்பே, அவவின் ஆத்மா அவவை விட்டுப்பிரிந்தது. குருநாதனை சிறு வயதிலேயே அன்பு செலுத்தி அவருக்குத் துணையாக இருந்தா. அவ செலுத்திய அன்புக் கடனினால் குருநாதன் ஆண் பிள்ளை என்ற முறையிலே இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ளி கடனைச் செலுத்தியது மட்டுமல்ல அந்தியேட்டி கிரியைகளிலும், சபிண்டீகரண கிரியைகளிலும் கனடா சென்று திரும்பி வந்து அன்புக் கடமையைச் செலுத்தினார். அவவின் பெறாமக்கள் கடமை செய்த குருநாதன் உட்பட, என்னையும் இந்தியாவுக்கு அழைத்துச் சென்று கன்னியாகுமரியில் அவவின் அஸ்த்தியை 31ஆம் நாளிலிருந்து ஒரு கிழமைக்குள் கரைப்பதற்கு முயற்சிகள் ஏடுக்கிறார்கள்.

5. துணைவியாரின் தொழில் இல்லத்தின் இல்லாள். அவவிடம் 91ஆம் ஆண்டு கொழும்பில் சொந்தமாக வீடு இல்லை. பெரும் பணமும் வங்கியில் இல்லை. அத்துடன் வெளியால் செல்வதற்கு முக்கிய காரணமுமில்லை. ஆனால் 1991ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் அவவின் சிநேகிதி மகளுக்கு கல்யாணம் U.K. இல் நடைபெற இருந்தது. அந்தக் கல்யாண விட்டிற்குச் செல்ல U.K. விசாவிற்கு விண்ணப்பம் செய்திருந்தார். அவவிற்கு அந்த மாதத்தில் U.K. விசா கிடைக்கவுமில்லை. அத்துடன் நடைபெறவிருந்த கல்யாணமும் முடிவடைந்தது. ஆனால் எதிர்பாராமல் நடைபெற்றது என்னவெனில், நாங்கள் இந்தியாவில் காசிக்குச் சென்று கங்கை நதியில் 16-02-1992 காலை 10 மணியளவில் நீராடிக்கொண்டிருக்கும் வேளையில், கொழும்பில் நாங்கள் வசித்த கொழும்பு 6, பொஸ்வல் பிளேஸ், 11A, இலக்கத்திற்கு நேரடியாக மொழி பெயர்ப்பாளருடன் U.K. விசா உத்தியோகஸ்தர் வந்து விசாரணை செய்யப்பட்டு, அதன் பின் விசா வழங்கப்பட்டது.

6. துணைவியார் பணம் சம்பாதிக்கும் தொழிலை பார்க்காவிட்டாலும், இல்லத்தின் இல்லாளாக கடமையாற்றினாலும், அவ தன் ஆசையை நிறைவேற்றுவதற்காக செய்யப்பட்ட காரியங்கள் செயல்களின் பெறுமதி வங்கியில் வைப்புப் பணமாக வைக்கப்பட்டதற்கு சமமாகும்.

7. துணைவியார் விட்டுச்சென்ற சொத்துக்கள் என் பொறுப்பிலே உள்ளது. பெறாப் பிள்ளைகள் கோரவும் இல்லை. எங்கு இருக்கிறது என்று கேட்கவுமில்லை. அதிசயம் என்னவென்றால் பெறா மக்களும் மருமகன் சோதிநாதன் உட்பட கூறியது யாதெனில் "ஆசையம்மாவின் சொத்துக்களை உங்கள் விருப்பம் போல் செலவு செய்யுங்கள். உங்கள் விருப்பம் போல் யாருக்கும் கொடுக்கலாம்" என்பதே.

8. துணைவியாருக்கு உயிருடன் இருக்கும்வரை குறிப்பாக டாக்டர் சோதிநாதனும் நளாயினியும் தங்கள் பணம், நேரம் ஆகியவற்றை செலவு செய்தது மட்டுமல்ல, அவ இறந்த பின்பும் செலவு செய்வதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள்.

9. துணைவியாரின் பெறா பிள்ளைகள் கூறியது யாதெனில், ஆசையம்மாவை எவ்வாறு நேசித்தோமோ, அதேபோல் உங்கள் மீது அன்பு செலுத்தி நேசிக்கின்றோம். உங்களுக்கு வேண்டிய யாவற்றையும் செய்ய ஆயத்தமாக இருக்கிறோம்.

10. இன்னும் கூறுவதற்கு பலதுண்டு. ஆனால் இறுதியாக துணைவியார் செய்த பாக்கியத்தையும், புண்ணியத்தையும் கூற விரும்புகிறேன்.

யாழ்ப்பாண சைவத் தமிழ் பெண்ணுக்கு தாலிப் பெலமும் பூவும் பொட்டும் மிகவும் முக்கியமானது. துணைவியாரின் முக்கியமான வேண்டுகோளும் அதுவேயாகும். நானும் அதை முழுமையாக ஆதரித்தேன். அதன் பிரகாரம் துணைவியார் தாலிப் பெலத்துடனும் பூவும் பொட்டுடனும் இறைவனடி சேர்ந்துள்ளார்.

*க. மு. தர்மராசா*
*துணைவன்.*

## உறவினர்களுடனும் அன்பர்களுடனும்














9 2 '91












BIRTHDAY



































# நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவியின் மறைவையொட்டிய இறுதிச்சடங்குகளில் நேரில் பங்குபற்றியும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், மலர் வளையங்கள் வைத்தும் பல்வேறு வழிகளில் உதவியுமுள்ள அனைத்து நண்பர்கள் உறவினர்களுக்கும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம், மதியபோசனம் போன்ற இன்றைய நிகழ்வுகளில் பங்குபற்றிய அன்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது குடும்பத்தலைவி இல்லத்திலும், மருத்துவமனையிலும் நோயுற்றிருந்தவேளை அவரை உன்னிப்பாகக் கவனித்ததோடன்றி உறவினராகிய எங்கள் எல்லோருக்கும் ஆறுதலும், தேறுதலும் தந்துதவிய பேராசிரியர் கார்லோ பொன்சேகா அவர்களுக்கும், வைத்தியகலாநிதி (திருமதி) குமார் பொன்னம்பலம் அவர்களுக்கும் எங்கள் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்நினைவு மலரில் அடங்கியுள்ள கட்டுரைகள், கவிதைகள் முதலியனவற்றைத் தந்துதவிய அன்பர்களுக்கும், இந்நினைவு மலரை வெளியிட உதவிய அனைவருக்கும், மலரை குறுகிய காலத்துள் பதிப்பித்துதவிய அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றிகள் உரித்தாகுக.

*- துணைவரும், பேறாமக்களும் -*

இல. 2, ஹாமர்ஸ் பிளேஸ்
ஹாமர்ஸ் அவெனியு,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
2005 - 10 - 11.